# பக்தி விஜயம்..

புரட்டாதி - ஐப்பசி : 2012
ரதம் : 01
வழி : 05

இல்லங்களில் படிக்கவேண்டிய பக்தி மலர்

நவராத்திரி சிறப்புமலர்

சரஸ்வதியின் குருநாதர் ! ..

புண்ணியம் தருமே..
புரட்டாதி மாதம்!

விஜயதசமி வருகிறது..
வெற்றி பெறுங்கள்!

அம்மன்களின் அறிமுகம்

அறுகம்புல் கணபதிக்கு
ஏன் பிடிக்கிறது? ..



நண்டு செய்த சிவபூசை!

உலகின் சிறந்த மாணவன் ..

உள்ளே ...
வாசிப்பு இன்பமும்,
ஆன்மீகமும் !

நம்நாட்டு சஞ்சிகை!

வாணிவிழா.. அது உலகவிழா!

## தொடர்ந்து வரும் இதழ்களில் ...




செருத்துணை நாயனார் ..
இவருக்கு எல்லாமே ஈசன்தான்.
அதேவேளை கோபமும் இவரிடம்
குடிகொண்டிருந்தது.
காரணம்,ஆலயங்களில்
ஆடம்பரம் நுழைவது இவருக்கு
பிடிக்காது.
ஒருநாள் பல்லவ நாட்டின் அரசர்
தன் மனைவியுடன் வழிபட ஆரூர்
ஆலயத்திற்கு வந்தார்.பரிவாரத்தோடு
அரசன் முன்னே செல்ல,அரசியின்
கவனம் செருத்துணையாரிடம் இருந்த
மலர்களின்மீது சென்றது.மல்லிகை,
முல்லை,இருவாட்சி,கதம்பம்,அல்லி,
அலரி,செந்தாமரை .. எல்லாமே
இறைவனின் பூஜைக்காக ...

அத்தனை பூக்களின் வாசனைகளும்
திரண்டு அரசியை மயக்கவே,
திரும்பி அவைகளின் அருகே
நடந்தாள். நாடாளும் அரசியாக
இருந்தாலும் இத்தனை
மலர்களையும் ஒருங்கே
பார்த்ததுமில்லை,சூடியதுமில்லை.
ஆசை பொங்கியது. பூசைக்குப்பின்
அவளுக்கே பிரசாதமாக தரப்பட
இருப்பவைதான் அவை. ஆனால்
ஆசை அறிவை தடுத்ததால்
மலர்களை இப்போதே அனுபவித்திட
ஆயத்தமானாள்.அரசியல்லவா!
யார் தடுத்திட முடியும்?..




ஆனால் இதைக்கண்டு ஒருவர் ஓடிவந்தார். அவர் செருத்துணையார். அவரின் கையில் பூ-நார் சீவும் குறுங்கத்தி! மலர்களை அள்ளியெடுத்து, மெய்மறந்து முகர்ந்த அரசியின் மூக்கில் அக் கத்தி பாய்ந்தது. சத்தம் கேட்டு ஓடி வந்தார், பல்லவ அரசர் கழற்சிங்கர். இரத்தம் பீறிட நின்ற பட்டமகிஷியை பார்த்தார். ஆத்திரத்தோடு உடைவாளை உருவினார்.செருத்துணையாரின் கதை முடிந்தது என்றே அனைவரும் நடுங்கினர். ஆனால் நடந்ததோ ..




சிவபக்தியின் உறைவிடம் அந்த மங்கை. ஆடம்பரமிக்க
கணவனின் மனமறிந்து நடந்து, பத்தியையும்
கடைப்பிடித்தாள் ..அப்படியொரு தம்பதிகளை
வானுலகும் கண்டிராது. ஆனால் அந்த ஆனந்த
வாழ்வை கொடூரம் சூழ்ந்தது. கணவனால்
விலக்கப்பட்டாள் .. கணவனுக்கு உதவாத
இளமையையும்,அழகையும் உதறினாள். பேய்வடிவம்
வரம்கேட்டு சுடுகாட்டில் வாழ்ந்தாள். அதே
பேய்வடிவத்தோடு தலைகீழாக கைலாயத்திற்கு நடந்து
சென்றாள். அங்கே " அம்மையே வருக .." என்று
சிவபெருமானே எதிர்கொண்டு வரவேற்றார்.
அந்த சிவனுக்கே தாயானாள்! எப்படி? ..

## எந்நாளும் இன்புற்றிருக்க.......




"தாயிற் சிறந்த கோயில் இல்லை .."



# விஜயம்..

100/=



# சஞ்சிகைகள் சஞ்சீவிகள்..


இந்து சமூகத்தின் ஆன்மீக எழுத்துப் பணியில்

இதழ் உருவாக்கம்,
கணனி வடிவமைப்பு,
நிர்வாக இயக்கம் :

**எஸ். பீ. முத்து**

அனுசரணை :

**வை. திருச்செல்வம்**

இந்த பக்திச் சஞ்சிகை
வெளிவரும் முகவரி :

**555, புதுத்தெரு,**
**மன்னார்,இலங்கை**

தொலைபேசி :

**071-3861168**
**077-4335144**
**023-2250071**

மின்னஞ்சல் :

nenjame @ gmail.com


சைவ அடியார்களுக்காக பல நூல்கள், சுவடிகள், சஞ்சிகைகள், இணையத் தளங்களிலிருந்து மூல விஷயங்கள் பெற்று, இலகு தமிழில் தரப்படுகின்றன ..

பெரியோர்கள் குறை, நிறைகளை எடுத்தியம்புவதோடு, வாசகர்களும் சமயச் செய்திகள், ஆக்கங்கள், விமர்சனங்களை தந்து ஆதரிக்க வேண்டுகிறோம் ..

***சி**வச்செல்வர்களுக்கு*
*தாழ்மையான வணக்கம்!*

வாசிப்பு ஆர்வமும், ஆன்மீக வாழ்வும் நம்மோடு எப்போதும் இருக்கவேண்டும் என்று ஆசைப்படுவதன் காரணமாக இந்த சஞ்சிகை தொடர்ந்து வருகிறது.

இந்த இரண்டு விஷயங்களும் ஏற்கனவே நம்மிடையே இல்லையா, என்ற கேள்வியும் நிச்சயமாக நியாயமானது. ஆனால், ஆமாம் என்று முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குமுன் ஏனோ தடுமாற்றம் வருகிறது. காரணம், அந்த பதிலில் வெற்றிடமும் இருக்கிறது.

சீரான கல்வி, நிறைவான பக்தி இரண்டும் போதுமான அளவு நம்மிடையே இருப்பதால் வாசிப்பும், ஆன்மீகமும் அதற்குள்தான் அடங்குகிறது என்று கற்பிதம் செய்யப்படுகிறது. கல்வியும், வாசிப்பும் வேறு. அதுபோல் பக்தியும், ஆன்மீகமும் வேறு என்ற சின்னஞ்சிறிய இடைவெளியை மட்டும் புரிந்துவிட்டால் உலக வரிசையில் நம் சமூகமும் இடம்பிடிக்கும்.

வாழ்வாதாரத்திற்கானதே கல்வி என்ற உறுதியில் வாழும் மனிதன், வாசிப்பில் கிடைக்கும் மற்ற எல்லாவித உன்னதங்களையும் இழந்துவிடுகிறான். அதுபோலவே நித்திய கடமையாக பக்தியை பேணி முடித்துவிட்டு, ஆன்மீகம் என்ற தேடலில் கிடைக்கும் ஞான வாழ்க்கையை தவற விடுகிறான். ஆனால் ஒன்று, இந்த பின்னடைவு நம் புலத்தில்தான் அதிகம். ஏனைய தேசங்களில் இந்த ஞானச்சிக்கல்கள் மிக அரிது. ஏனெனில், அங்கே எப்போதோ தெளிவாக, மென்மையாக, எளிமையாக 'அது' கூறி முடிக்கப்பட்டுவிட்டது.

மேலே நாம் காண்கின்ற சஞ்சிகைகள் பழங்காலத்திலேயே நம் அண்டைய தமிழகத்தில் வெளிவந்து, பாலக வயதிலேயே ஆன்மீகத்துக்கு அரிச்சுவடியாகின. பிறகு ஆன்மீகமும் அங்கே வளர, அதேவேகத்தில் ஆன்மீக சஞ்சிகைகளும் வளர்ந்தன. இப்போதோ ஆயிரக்கணக்கில் வெளிவருகின்றன, வாசிக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் .. **ஆழமான விஷயங்களை மிக எளிமையாக** தர முன்வந்த ஆரம்பம்தான். நாமும் பின்னால் சென்று, அதே ஆரம்பத்தில் இருந்து புறப்பட்டு வுந்தால்தான் 'அது' கிடைக்கும் என்றால் 'பக்தி விஜயுத்தை' வெளியிடுவதில் தாழ்வென்ன? ..

**தயக்கமுடன், ஆசிரியர்..**



சூரிய காயத்ரி :

"அஸ்வத் துவயாய வித்மகே
பத்மஹஸ்தாய தீமஹி தன்னோ
சூரியப் ப்ரசோதயாத் .. "

# சூரிய வழிபாடு!


பிரம்மஸ்ரீ
சபா. உமாபதிசர்மா
சித்தங்கேணி
ஸ்ரீசிவசிதம்பரேஸ்வரர்
தேவஸ்தானத்திலிருந்து .....


எல்லோருடைய வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பது சூரியன். இது ஒரு பெரும் பிரபஞ்ச சக்தி!

இதனை மானிடஉலகம் நமஸ்கரிக்கவேண்டும், நன்றியோடு நோக்கவேண்டும் ..

அப்படிச் செய்யும்போதுகூட நமக்குத்தான் மேலும் பலன்கள் வந்து சேருகின்றன. தியானமும், யோகாசனமும் சூரிய நமஸ்காரத்தில் வருவதால் உடலும், உள்ளமும் மலைக்கு நிகரான வலிமை பெறுகிறதல்லவா!

பிறகு நோய்களுக்கும், வேதனைகளுக்கும் நம்மிடம் வேலையிருக்குமா? இன்பமும், ஆரோக்கியமும்தான் நம் வாழ்வில் கைகோர்த்து நடந்துவரும்.

ரிஷிகளும், சித்தர்களும், மகான்களும் இதற்கு உதாரணமாக இருப்பதற்கும் மேலாக, விஞ்ஞான உலகமே ஒப்புக்கொண்டு பாராட்டுகிறது.

சிவாகம வழிபாட்டில் முக்கிய இடம்பெறும் சூரிய பகவான் உலக உயிர்களின் இயற்கைத் தெய்வம். சிவனின் முக்கண்களில் ஒன்றாக இருப்பதால் சிவசூரியன் என்றும் அழைக்கப்படுகிறார். கிரக மண்டலத்தில் நவநாயகர்களின் தலைவனாக இருந்து, கற்பனைக்கெட்டாத விஸ்தீரணத்தை ஆட்சி செய்கிறார்.

சாஸ்திரபூர்வமாகவும், சமூக சார்பாகவும், தெய்வாம்ச ரீதியாகவும் நமக்கு கிடைக்கின்ற அனுகூலத்தை சூரிய தேவனைப்போல வேறு எவராலும் தர இயலாது ..

சூரிய பகவானை வழிபடும்போது நம் தந்தையார் நலம்பெறுகிறார். யோக, தியானத்தோடு வணங்கும்போது நமது உடல், உள்ளம், கண், எலும்பு, இருதயம் வலுவடைகிறது. அவைகளில் நோய்கள் வருவதே இல்லை. சூரியக்கதிர்களின் தெய்வீக ஸ்பரிசம் ஆகமங்களை தழுவியும் நன்மை புரிகிறது. அதனால் சூரிய வழிபாடு செய்துவரும் காலத்தில் பிரச்சினைகள் தீர்கிறது, வேலை வாய்ப்புகள் வருகின்றன, பதவி உயர்வு கிடைக்கிறது. ஆவணிஞாயிறு முதல், ஞாயிறுதோறும் அபிஷேகம், ஆராதனை, விரதம் அனுஷ்டிக்கவேண்டும். சிகப்பு வஸ்திரங்கள், ஆபரணங்கள், மாலைகள் சூட்டி, மூன்று எண்ணை கூட்டி விளக்கேற்றல் முதலிய கைங்கர்யங்களினால் தோஷநிவர்த்தி, சூரியதோஷ நிவாரணம் கிடைக்கிறது.

தோஷம் அதிகமாக உள்ளவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் வெண்டாமரை இலையில் அவருக்குப்பிடித்தமான பாயாசம், முதலிய நிவேதனங்களை படைத்து வெண்டாமரைப் பூவினால் அர்ச்சனை செய்தும், அவரின் அதிபதியான சிவனை பூஜித்தும், சூரிய கவசம் முதலான தோத்திரங்களைப் படித்தும் சூரிய பகவானின் அருளைப் பெறலாம்.

இதைவிட மாணிக்கம் பதித்த மோதிரத்தை அணிந்துகொள்ளல், கோதுமை தானியம் தானமாகக் கொடுத்தல், எருக்கலை சமித்தினால் ஹோமம் செய்தல், அபிஷேக ஆராதனைகளை செய்வித்தல் ஆகியவை தோஷ நிவர்த்திக்காக ஆற்றப்படுகின்ற நிகழ்வுகளாகும்.

யாழ்ப்பாணம் சித்தங்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் சிவசூரியனார் நவநாயகர்களோடும், தனித்தும் அமர்ந்துள்ளார். இங்கே தனி ஆலயத்தில் மேற்கு நோக்கியும், நவநாயகர்களோடு கிழக்கு நோக்கியும் காட்சி தருகிறார். இங்கு சிறப்பாக ஆவணி ஞாயிற்றுக்கிழமைகளில் விஷேடமான அபிஷேக, ஆராதனைகள் நடைபெறுகின்றன. சூரிய பகவானுக்கு சிகப்புநிற வஸ்திரம், ஆபரணம், பூக்கள், மாலைகள் முதலியவற்றால் அலங்கரித்து பூஜை நடைபெறும்போது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

விஷேடமாக இங்கே தினமும் காலைப் பூசையில் சிவாகம முறைப்படி சூரிய பகவானுக்கு முதல் பூசை நடைபெறுவதானது சூரிய வழிபாட்டின் சிறப்பை காட்டுகிறது. சூரியனின் அதிபதி சிவபெருமான் ஆகையால் சூரிய ஆராதனை முடிவுற்றதும், சிவ ஆராதனை நடைபெறுகிறது. இதனால் சூரிய தோஷ நிவாரணத்தை அடியார்கள் பரிபூரணமாகப் பெறுகிறார்கள்.

என்றும் நிர்மலமாய், எதற்கும் கட்டுப்படாமல், எங்கும் நிறைந்திருக்கின்ற பரிபூரணமான ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரரையும், சூரிய பகவானையும் ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபடும்போது நினைத்த காரியம் கைகூடுகிறது. எனவே மனம் நிறைந்த அருளோடு நித்தியானந்தமாய் இவ்வுலகில் பெறுவாழ்வு வாழ்வோமாக ..

# சமயச் செய்திகள்!

## மங்கலம் பொழிந்தது, ஸஷ்டியப்த விழாவில் ..



வடமராட்சி ஸ்ரீ வல்லிபுராழ்வார் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ க. புருஷோத்தம குருக்கள், ரஜனி அம்மா தம்பதியினரின் ஸஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு **24.08.2012** அன்று கண்ணன் பாடல்கள் அடங்கிய **''புருஷோத்தம கீதங்கள்''** என்னும் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

## தோஷங்கள் விலக ..



எங்கும் நிறைந்திருக்கும் சூரிய பகவானை பூஜிப்பதாலும், பிரார்த்திப்பதாலும் சூரிய தோஷங்கள் விலகி, நல்வாழ்வு அமைகிறது.

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானத்தில் நடைபெற்ற சூரிய ஆராதனை நிகழ்வினை படத்தில் காணலாம்.


## காக்கிறது இந்து தர்மம்! கவலை எதற்கு? ..



பாலகர்களின் கல்வி, முதியோர்களின் மகிழ்ச்சி, கோயில்களின் பராமரிப்பு, தாய்மார்களின் திருப்தி, இளைஞர்களின் ஆக்கசக்தி என்று எத்தனையோ தேவைகளை எதிர்கொண்ட நிலையில் பல கிராமங்களில் பொழுது விடிகிறது. மன்னாரின் இரணைக்குளம் கிராமமும் அப்படித்தான். போதாததற்கு குடிநீர் பிரச்சினையும் வேறு.

எனினும், எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய ஈசனின் தொண்டர் குழாமின் வருகைகள் இங்கே உள்ளங்களை வருடிக்கொடுக்கின்றன, தன்னம்பிக்கையை வளர்க்கின்றன.





இறையருளால் இன்னல்களை இன்பமாக எதிர்கொள்ளும் சக்தியை தருகின்றன.

கூடவே தீர்வுகளும் முடிந்தவரை கிடைக்கின்றன. விதவைகள், வறிய மாணவர்கள், கோயில் பரிபாலகர்கள், அறநெறி வகுப்பாளர்கள் உட்பட கிராமத்து பரிபாலனத்தை கருத்தோடு கவனிக்கிறது இந்த சிவத்தொண்டர் குழாம்!



## நவராத்திரி பிரசாதம்!



## தேவியர் சிறப்புகள்!

சிவபூமியாகிய மன்னார்நகரை ஆட்சி செய்கின்றாள் இந்த அம்மன். வருடாந்த அலங்கார உற்சவம் சிறப்புற நடந்தேறி சில நாட்கள்தான் ஆகியிருக்கிறது .. சிவனோடு ஐக்கியமாகி அருள் தரும் இத்தலத்திலே, அம்மையின் வாகனமும் சிம்ம, நந்தி தோற்றம் கொண்டுள்ளது தனிச்சிறப்பு!

இனி, அகிலாண்டேஸ்வரியின் புராணத்துளிகள் சிலவற்றை அறிவோமா ..

# எழுத்தூர் அகிலாண்டேஸ்வரி அம்மன்...

**அ**ம்மன்களின் வரிசையில் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரியின் சரிதமோ கற்கண்டுபோல இனிப்பூட்டும் ..

ஒருமுறை படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கு தான் படைத்த மங்கை ஒருத்தியின்மீதே மோகம் வந்துவிட்டது. அதன் பலனாக அவருக்கு ஸ்திரி தோஷம் ஏற்பட்டு விட்டது. இதனால் வருந்தி தோஷ பரிகாரம் வேண்டி சிவனை பிரார்த்தித்தார். மனமிரங்கிய பெருமான் பிரம்மாவுக்கு வழிகாட்ட கைலாயத்திலிருந்து புறப்பட்டார். அப்போது அருகிலிருந்த அம்பாள் தானும் உடன் வருவதாக வேண்டினாள். ஸ்திரி தோஷத்திலிருக்கும் பிரம்மா பிற நங்கையரிடம் மோகவயப்படுவதால் அங்கே பார்வதி வருவது தகாது என தடுத்தார் சிவன்.

ஆயினும் பார்வதிதேவி ''அப்படியானால் நாம் மாற்று உருவத்தில் செல்வோம். நான் உங்களின் தோற்றத்தில் வருகிறேன். நீங்கள் என்னைப்போன்று சேலையை அணிந்து வாருங்கள்..'' என்றாள். சிவனுக்கும் திருவிளையாட்டுகள் பிடிக்கும்தானே .. மேலும் சிவமும், சக்தியும் உலகிற்கு ஒரே பொருள்தான் என்பதும் வாஸ்தவம். எனவே இருவரும் அவ்வாறே தோற்றத்தை மாற்றிச்சென்று பிரம்மாவுக்கு தரிசனம் கொடுத்து தோஷநிவர்த்தியும் தந்தனர். இச்சம்பவத்தினால் சிவதோற்றம் பெற்றதால் அகிலத்தை சிவனுடன் சமமாக ஆட்சிசெய்பவளாக 'அகிலாண்டேஸ்வரி' என நாமம் கொண்டாள். அகிலாண்டேஸ்வரியை வழிபடும் அடியார்களுக்கு கூடவே சிவனும் தரிசனம் தரும் ரகசியம் பக்தர்கள் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

**சிவனின் கட்டளையை ஏற்று, இந்த அம்மன் பூலோகத்தில் சிவபூஜை செய்ததும், காவிரி நீரில் லிங்கம் பிடித்து வழிபட்டதும், பிற்காலத்தில் முனிவர் ஒருவரின் தவத்தால் அகிலாண்டேஸ்வரி அற்புதம் செய்ததும், அம்மன் தந்த நாவல்பழத்தோடு விதையையும் விழுங்கியதால் அவரின் சிரசில் நாவல் மரம் வளர்ந்ததும் ..!!!**

**வே**தியர் ஒருவர் கவி இயற்றுவதில் வல்லவர். அவர் ஒருநாள் அகிலாண்டேஸ்வரி கோயிலில் பிரார்த்தித்தார் அவருக்கு அருள்புரிய அம்பாள் வெற்றிலை தாம்பூலம் மென்றவாறு சென்றாள். ''நான் வெற்றிலை போட்டுள்ளேன். ஆலயத்துள் உமிழ்வது தவறு. நீர் உமது வாயை திறந்தால், உமிழ்ந்து கொள்வேன் ..'' என்றாள். இதனால் கோபமடைந்த வேதியர் இடத்தை விட்டகன்றார்.

அதே தினத்தில் வரதர் என்றொரு பக்தரும் தரிசனத்திற்கு வந்தார். கோயில்கள் சுத்தமாக இருக்க வேண்டுமென்பதில் அவர் கண்டிப்பானவர். அம்பாள் வெற்றிலை மெல்லும் அழகை போற்றிவிட்டு ''தாயே, தங்களின் சந்நிதியை இப்போதுதான் சுத்தமாக்கியிருக்கிறேன் .. ஆதலால் உமிழ்நீரை எனது வாயில் துப்புக..'' என்று வேண்டவே, அம்மையும் அவ்வாறே செய்தாள். பிற்காலத்தில் இவரே காலமேகப்புலவர் என்று போற்றப்பட்டார்.

கல்வி, கலைஞானம் பெற அகிலாண்டேஸ்வரிக்கு வெற்றிலை தாம்பூலம் படைத்தாலே போதும்

# மாணவர் சமய அறிவுப்போட்டி
# இல: 05 !?




( விடைகள் இதே சஞ்சிகையில்! ..)

**அ**ன்பான மாணவர்களே,20

நமது சமய அறிவை ஊட்டும் வண்ணம் இந்த **'பக்தி விஜயம் ..'** வெளிவருகிறது. இது உங்களுக்கும் வழிகாட்டியாக திகழ்கிறது. பரீட்சைகளில் புள்ளிகள் பெறுவதற்கு மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வெற்றிபெறுவதற்கு சமயத் தகவல்கள் மிக அவசியம்.

***இல: 03*** சமய அறிவுப்போட்டியில் பெருமளவில் நீங்கள் பங்கு பற்றியிருந்தீர்கள். **அனைவரையும் பாராட்டுகிறோம் ..**

## இல: 03 போட்டிக்கான விடைகள் ..

| | | |
|---|---|---|
| 01. கொழுக்கட்டையும், | 02. சுயம்பு, | 03. சுந்தரகாண்டம், |
| 04. கிருஷ்ணன், | 05. வில்வம், | 06. மகாவிஷ்ணு, |
| 07. வரலட்சுமி | 08. பீஷ்மர், | 09. மோதிரம், |
| 10. குண்டையூர் கிழார் | | |

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | : | வேதிகா பிரபாகரன், வ / கனகராயன்குளம் ம.வி. |
| 2ம் பரிசு | : | சசிகாந்த், யு.சி. லேன், மானிப்பாய் |
| 3ம் பரிசு | : | கோகிலன், மன் / கௌரியம்பாள் அ.த.க.பாடசாலை திருக்கேதீஸ்வரம் |

## இம்மாத வினாக்கள் --



01. விஜயதசமியன்று சிறுவர்களுக்கு. .................. தொடக்குவார்கள்.
02. சரஸ்வதியின் குருநாதர் ................................ ஆவார்
03. அமாவாசை தினத்தை பௌர்ணமி என்று ...................................கூறினார்
04. கற்கடேஸ்வரரை ........................ ராசிக்காரர்கள் வழிபடுவார்கள்
05. சஞ்சீவியை கொண்டுவர அனுமனுக்கு ........................ வழி காட்டினாள்
06. சூரியனை உதிக்கவேண்டாமென .......................... உத்தரவிட்டாள்
07. சிவன் அபிஷேகப் பிரியர், விஷ்ணு .................... பிரியர்
08. துவஜஸ்தம்பம் என்பது ............................... ஆகும்
09. சிவனடியாரை அடிப்பதற்கு ........................ உலக்கையை ஓங்கினாள்
10. முருகன் வள்ளியை மணம்புரிந்த இடம் ...............................



சரியான விடைகளை எழுதி அனுப்புகின்ற மாணவர்கள், குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசளிக்கப்படுவார்கள்.
விடைகளை **30.09.2012** க்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி :
***ஆசிரியர்,***
***'பக்தி விஜயம் ..'***
***55, புதுத்தெரு, மன்னார்.***

**(இப்பக்கத்தை கத்தரிக்க வேண்டாம் .. வேறு பேப்பரிலேயே எழுதி அனுப்பவும்.)**

1. கடவுள் வேறு மனிதன் வேறா?

2.படிக்காதவர் தெய்வத்தை அறியமுடியாதா?

3.ஆணவம் வர ஆற்றல் காரணமா?

4.அசுரர்கள் இப்போது இல்லையா?


# தெய்வீக சந்தேகங்கள்!

1



**கடவுளை வழிபடுதலே புண்ணியம் என்பதோடு மட்டும்** நின்றுவிடுவதால் ஏகப்பட்ட ஆன்மீக வாய்ப்புகளை தவற விடுகிறோம். கடவுளிடம் உள்ள உயர் பண்புகளை நாமும் வளர்த்துக்கொள்வதையே வேதங்கள் எதிர்பார்க்கின்றன. கடவுள் என்றால் எங்கோ இருக்கின்ற எட்டாத பொருளென்று எண்ணுவதும் ஒரு இடைவெளியாகி விடுகிறது. அதனால்தான் ஸ்ரீராமபிரான் போன்ற மானிட வடிவிலும் இறைவன் தோன்றி பூமியில் இருந்திருக்கிறார். மனிதனுக்குள் இருக்கின்ற பண்புகள் தெய்வத்திற்கும் மேலானவை என்று வாழ்ந்து காட்டியிருக்கிறார். அனுமனும், குகனும், வசிட்டரும் அந்த குண மேன்மையில் மயங்கியதே இதற்கு சாட்சியன்றோ?

2



**வேதங்களுக்கே கிடைக்காத திருவடிகள்** படிப்பில்லாதவர்களுக்கு எளிதில் கிடைத்து விடுவதால் வேதப்பொருளும் அவர்களுக்கு தானாகவே விளங்கி விடுகிறது. ஞான யோகம், கர்ம யோகம் என்றெல்லாம் படிக்காதவர்கள் குழம்புவதில்லை. ஏனெனில், தங்களின் அறிவில் அவர்கள் தங்கியிருப்பதில்லை. ‘அவனின்’ அன்பில்தான் அவர்கள் தங்கியிருக்கிறார்கள். அதனால அந்த சரணாகதியிலேயே அவர்கள் ஏகப்பட்ட ஞானத்தை அடைந்துவிடுகிறார்கள். ‘ஞானத்தைத் தேடினோம்’ என்ற தொனி படிக்காதவர்களிடம் இல்லை. படித்தவன்தான் இன்னும் ‘தேடிக்கொண்டே’ யிருக்கிறான் பாவம்..

3



**ஆஞ்சநேயரிடம்** இருக்கின்ற விஷயங்களும் சரியாக நம்மிடம்வந்து சேர்ந்து விட்டனவா என்பதும் சந்தேகமே .. புத்திசாலிகள் பலவான்களாக இருப்பதில்லை. பலசாலிகள் பக்தியை நம்புவதில்லை. பக்தியுள்ளவர்களும் மனிதர்களை முக்கியமானவர்களாக ஏற்பதில்லை. தெய்வ நம்பிக்கை அதையும் தடுக்கிறது. இதையெல்லாவற்றையும் கடந்து அனுமார் மட்டும் கச்சிதமாக செயல்பட்டிருக்கிறார். எல்லா ஆற்றல்கள் இருந்தும் கூனிக்குருகியே சேவகம் புரிந்திருக்கிறார். கீழ்ப்படிவின் விளிம்பு வரை சென்றபிறகே கதாயுதத்தை கைகளில் எடுத்திருக்கிறார். சிவ அம்சமாக இருந்தும் மானுட் ராமனைத் தொழுதார்.

**நரகாசுர வதம்கூட தீபாவளி** கொண்டாட்டத்தில் மறந்துவிடுகிறது. ஆசை, கோபம், பொறாமை, புறக்கணிப்பு போன்ற அசுரர்கள் நம்மோடு தங்கியிருக்க, தீபாவளி மட்டும் வந்துவந்து போகிறது.
பரமாத்மாவின் சக்ராயுதத்தால் நரகாசுரனை அழிக்க முடிந்தாலும் நமக்குள் அசுரர்கள் இருக்கவே செய்கிறார்கள் ..




நவராத்திரி பிரசாதம்!

# மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்!





## தேவியர் சிறப்புகள்!!



நம் திருநாட்டின் எழிலுக்கு எழில் சேர்க்கும் நகரம் மாத்தளை. பன்னகம் என்றும் இம்மாநகரை சுவைத்து அழைப்பர்.

இந்நகரின் பெருஞ்சிறப்புக்கு காரணமாகி, இங்கே வானுயர்ந்த கோபுரவாசம் புரிந்து வருபவள் ஸ்ரீ முத்துமாரி அம்மன்.

இலங்கையின் பெருந் திருக்கோயில்களை தரிசித்து வரும்போது, இந்த குளுகுளு நகருக்குள் நுழைந்துவிட்டால், முதலில் கவனத்தை அள்ளுகிறது அன்னையின் கம்பீர உறைவிடம்! நாட்டின் பிரசித்தி பெற்ற தலங்கள் பலவும் தனியான ஒரு சிற்றூரில் அமைந்து, அடியார்களை உள்வாங்குவது வழக்கம். ஆனால், இந்த அம்மன் மாநகரின் மத்தியிலேயே தலத்தை அமைத்துக்கொண்டு, பக்தர்களின் அலைச்சலைக் குறைத்துவிடுவது கவனிக்கத்தக்கது.

எந்த சந்தடியும், இரைச்சலும் இந்த அம்மனின் தரிசனத்திற்கு இடையூறு தருவதற்கு இடம் தராவண்ணம் அமைந்திருக்கிறது திருக்கோயில்.

ஐந்து ரதங்களோடும், அழகைக் கொட்டும் சிற்பங்களோடும், ஏகப்பட்ட பரிவார மூர்த்திகள் சகிதம் அருள்மலை பொழியும் இந்த அன்னைக்கு நாடு முழுவதும் பக்தர்கள்தான்!

கண்டியிலிருந்து **27** கிலோ மீட்டர்தான். நாட்டின் எப்பகுதியிலிருந்தும் சிலமணி நேரப் பயணம்தான்.

யாராக இருந்தாலும், எந்த ஊரிலிருந்து வந்தாலும் ஆதரிப்பதற்கு காத்திருக்கும் அம்பிகையாம் இந்த ஸ்ரீ முத்துமாரியம்மன், **108** அடி கோபுரத்தில் நமக்காக காத்திருக்கிறாள். தாமதிக்காமல் சென்று வழிபடுதலே நாம் செய்யவேண்டியது ..

அதிலும், நவராத்திரி காலத்தில் என்றால் தரிசனம் இன்னும் சிறப்பாக இருக்கும். நாளொரு அலங்காரமும்,
திவ்ய பேரொளியும் சிந்த தேவி பக்தர்களை மகிழ்விக்கும் இந்த ஒன்பது நாட்களும் பக்திப் பிரவாகத்தில் ஆலயம் காட்சி தரும் ..

# புண்ணியம் தருமே, புரட்டாதி மாதம்!

***19.09.2012,*** புதன் கிழமை
விநாயகர் சதுர்த்தி விரதம்

***20.09.2012,*** வியாழக்கிழமை
ரிஷி பஞ்சமி

***21.09.2012,*** வெள்ளிக்கிழமை
ஷஷ்டி விரதம்

***22.09.2012,*** சனிக்கிழமை
முதலாம் புரட்டாதிச்சனி

***23.09.2012,*** ஞாயிற்றுக்கிழமை
அட்டமி, நவமி

***26.09.2012,*** புதன்கிழமை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

***27.09.2012,*** வியாழக்கிழமை
பிரதோஷ விரதம்

***28.09.2012,*** வெள்ளிக்கிழமை
நடேசரபிஷேகம்

***29.09.2012,*** சனிக்கிழமை
பூரணை விரதம்,
உமா மகேஸ்வர விரதம்,
கடையிற்சுவாமி குருபூசை

***30.09.2012,*** ஞாயிற்றுக்கிழமை
மஹாளயபட்ஷாரம்பம்

***03.10.2012,*** புதன்கிழமை
மஹாபரணி

***04.10.2012,*** வியாழக்கிழமை
சங்கடஹர சதுர்த்தி விரதம்

***06.10.2012,*** சனிக்கிழமை
கபில ஷஷ்டி,
மூன்றாம் புரட்டாதிச்சனி

***08.10.2012,*** திங்கட்கிழமை
மத்தியாஷ்டமி
அட்டமி -- நவமி

***11.10.2012,*** வியாழக்கிழமை
ஏகாதசி விரதம்



# நலம் தரும் நாட்களும், விரதங்களும்...

***12.10.2012,*** வெள்ளிக்கிழமை
சந்நியஸ்தம மகாளயம்,
அருணந்தி சிவாச்சாரியார் குருபூஜை

***13.10.2012,*** சனிக்கிழமை
பிரதோஷ விரதம்

***14.10.2012,*** ஞாயிற்றுக்கிழமை
ஸஸ்திரஹத மகாளயம்,
கேதாரேஸ்வரி விரதம்,
போதாயன அமாவாசை

***15.10.2012,*** திங்கட்கிழமை
அமாவாசை விரதம்,
மஹாளயபட்ஷ முடிவு

***16.10.2012,*** செவ்வாய்கிழமை
நவராத்திரி விரதாரம்பம்


மாணவர் பகுதி

**எந்த விஷயத்திலும் கூர்மையான பார்வை, கற்றுக்கொள்ளும் ஆர்வம், பாடங்களில் அதீத கவனம் -- இவையே சிறந்த மாணவருக்கு இலக்கணம்! உலகின் மிகச்சிறந்த மாணவனான அர்ஜுனனை பின்பற்றினால் புள்ளிகள் நிச்சயம்!**

**வாணிவிழாக்காலம் !!..**







# வெற்றியின் ரகசியம்!

**வாணி விழா பட்டி தொட்டியெல்லாம் களை கட்டும் காலம் இது.**

**'மழைக்குக்கூட பள்ளிக்கூடப் பக்கம் ஒதுங்கவில்லை ..' என்று கூறிக்கொள்பவர்கள் உட்பட சகலரும் சரஸ்வதி பூஜையிலே மூழ்கி ஆனந்தமடையும் நாட்கள் இவை. கலைமகளுக்கு விழா என்றாலே அது மாணவர்களுக்குத்தான் அதிக கொண்டாட்டம்.**

**இந்நேரத்தில் நாமும் நமது மாணவச்செல்வங்களை படிப்பில் உஷார் படுத்தலாம் என்று, 'நவராத்திரி ஸ்பெஷ'லாக ஒரு புராண 'டிப்ஸை' தருகிறோம் ..**

துரோணரின் குருகுலத்தில் பாண்டவர்களும், கௌரவர்களும் வில்வித்தை பயிலும்போது பாண்டவர்களே திறமைசாலிகளாக இருந்தனர். அவர்களின் முன்னேற்றத்தைக் கண்டு துரியோதனன் குருவை சந்தேகித்தான். தமது குருநாதர் பாண்டவர்களிடம் தனி அக்கறை காட்டுவதாக எண்ணி குமுறினான்.

இதனை பாட்டனாகிய பீஷ்மரிடம் முறைப்பாடு செய்தான். அவரும் துரோணரை சந்தித்து கௌரவர்களின் மனக்குறையை கூறினார். இதைக்கேட்டு வருந்திய துரோணர்,

''பிதாமகரே, இளைய தலைமுறையினரிடம் நான் எந்த பேதத்தையும் காட்டுவதில்லை. அனைத்து மாணவர்களையும் சமமாகவே பயிற்றுவிக்கிறேன் .. கற்றுக்கொள்ளும் ஆர்வமுள்ள மாணவர்கள் விரைவாக முன்னேறுகிறார்கள்! அவ்வளவுதான் ..'' என்றார்.

இருப்பினும், அனுபவத்தின் வாயிலாக இதனை பீஷமருக்கு உணர்த்த விரும்பினார். ஒருநாள் தன் சீடர்களோடு ஆற்றங்கரைக்கு குளிப்பதற்காக செல்லும்போது பீஷ்மரையும் உடன் வருமாறு வேண்டினார் துரோணர்.

பீஷ்மரும், துரோணரும் முன்னால் நடக்க கௌரவரும், பாண்டவரும் பின்னால் வந்துகொண்டிருந்தனர். சிறிது தூரம் நடந்ததும் துரோணர் திரும்பி,

''அர்ஜுனா, எண்ணைக் கிண்ணத்தை மறந்துவிட்டேன். ஆசிரமம் சென்று அதனை எடுத்து வா!..'' என்றார். அர்ஜுனனும் திரும்பி ஆசிரமத்தை நோக்கி ஓடினான்.

தொடர்ந்து அனைவரும் ஆற்றை நோக்கி நடந்தபோது, வழியில் ஒரு ஆழமரம் இருக்கவே அதன் நிழலில் பீஷ்மரும், துரோணரும் ஒரு கல்லில் அமர்ந்தனர். மாணவர்கள் சுற்றிலும் தரையில் அமர்ந்தனர். அர்ஜுனன் வந்து சேர்வதற்குள் ஒரு புதிய பாடத்தை நடத்த விரும்பினார் குருதேவர்.

குனிந்து, ஒரு அஸ்திர பிரயோக மந்திரத்தை தரையில் எழுதினார். பின்னர் மாணவர்களிடம், ''இந்த மந்திரத்தை மனதில் தியானித்து, ஒரு அம்பு எய்தினால் இந்த மரத்தில் உள்ள அத்தனை இலைகளிலும் துளைகள் ஏற்படும் ..'' என்றார்.

மாணவர்களும் முயன்றனர். மந்திர உச்சரிப்போ, குறியோ தவறி ஒவ்வொருவரும் தோற்றனர். கடைசியில் துரியோதனன் முயன்றபோது வெற்றி கிடைத்தது. அவன் மந்திரம் தியானித்து எய்த அம்பு மரத்திலிருந்த அனைத்து இலைகளையும் துளைத்தது.

இதைப்பார்த்த எல்லோரும் கைதட்டி பாராட்டினர். பீஷ்மரும் துரியோதனனை வாழ்த்தினார். இதனால் அவன் மகிழ்ச்சியும், பெருமிதமும் கொண்டான்.

''சரி, நாம் நீராடச் செல்வோம் .. அர்ஜுனன் எண்ணையுடன் ஆற்றங்கரைக்கு வந்து சேரட்டும் ..'' என்றபடி துரோணர் எல்லோரையும் அழைத்துச் சென்றார்.

பின்னாலேயே அர்ஜுனனும் எண்ணைக் கிண்ணத்துடன் வந்து சேரவே, அனைவரும் நதியில் நீராடினர். நீராடிவிட்டு அங்கிருந்து கிளம்பியவர்கள் திரும்பும் வழியில் அதே ஆழமரத்தடியில் வந்து இளைப்பாறினர். அப்போது நிமிர்ந்து மரத்தைப் பார்த்தபோது எல்லோரும் திகைத்தனர். காரணம், மரத்திலிருந்த எல்லா இலைகளிலும் இரண்டாவது துளை போடப்பட்டிருந்தது.

பீஷ்மருக்கோ தலை சுற்றியது.

'' துரோணரே, துரியோதனன் அம்பெய்து துளையிட்ட இலைகளில் இரண்டாவது துளை எப்படி வந்தது? '' என்று கேட்டார்.

துரோணரும் குழப்பத்துடன் ''இது யாருடைய வேலை? '' என்று மாணவர்களை விளித்தார்.

''அடியேன்தான் ..'' என்று பணிவோடு முன்னால் வந்தான் அர்ஜுனன். திகைத்த பீஷ்மரும், ''இந்த வித்தையை துரோணர் கற்றுக்கொடுத்தபோது நீ இங்கே இல்லையே, பிறகெப்படி உனக்கு தெரிந்தது? ..''என்று கேட்டார். அதற்கு அவன் சொன்ன பதில் ..

''தாத்தா, நான் எண்ணைப் பாத்திரத்துடன் இந்த இடத்திற்கு வந்தபோது நீங்கள் இருந்து சென்ற தடங்களைப் பார்த்தேன். கூடவே, ஒரு மந்திரமும் தரையில் தெரிந்தது. மரத்திலிருந்த இலைகளில் துளைகள் இருந்தன..''

'' இரண்டுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதுபோல பட்டது. உடனே அந்த மந்திரத்தை உச்சரித்து அம்பு தொடுத்தேன். என் ஊகம் தவறவில்லை. நான் விட்ட அம்பு எல்லா இலைகளையும் துளைத்தது...'' என்றான்.

உடனே அவனைக் கட்டித்தழுவினார் பீஷ்மர். அனைவரும் அர்ஜுனனின் சாதுர்யத்தை பாராட்டியபோது துரியோதனன், ''இதென்ன பிரமாதம், இது ஏற்கனவே நான் செய்ததுதானே..'' என்றான்.

இதைக்கண்ட துரோணர் சிரித்தவாறு, ''நல்லது, துரியோதனா எங்கே.. மீண்டும் முன்புபோல் துளையிடு பார்க்கலாம்!'' என்றார்.

''இதோ ..'' என்றவாறு வில்லை உயர்த்தியபடி மந்திரம் எழுதியிருந்த இடத்தைப் பார்த்தான் துரியோதனன். ஆனால் அந்த இடத்தில் மந்திரம் இருக்கவில்லை. அது அழிக்கப்பட்டிருந்தது கண்டு அதிர்ந்தான்.

பவ்வியமாக பதில் சொன்னான் அர்ஜுனன். ''தரையில் எழுதப்பட்டிருக்கும் மந்திரத்தை யாரும் மிதித்துவிடக்கூடாதே என்று நான்தான் அதனை அழித்துவிட்டேன் ..''

மந்திரத்தை மனதில் பதிய வைக்கத்தவறியதை எண்ணி வெட்கப்பட்டான் துரியோதனன்.


ஒருமுறைக்கு மேல் மனனம் செய்யும் வழக்கம் அர்ஜுனனுக்கு இல்லை என்பது துரோணருக்கும் தெரியும். சிலையாய் நின்ற பீஷ்மரின் பக்கம் திரும்பினார்

''பீஷ்மரே, இப்போது கூறுங்கள். என்மீது தவறு உண்டா? ..''

சொல்வதறியாத நிலையில் துரோணரை கட்டித் தழுவினார் பிதாமகர். அந்தத் தழுவலில் இருந்த வேதனையை துரோணரும் உணர்ந்தார்.



# ஸ்ரீ ரங்கநாதருக்கு பிரமோற்சவம்! ..



உற்சவம் காணும் ஊர்த் தலங்கள்..

## ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள்! ..



வட்டக்கச்சியில் தலங்கொண்டு அருட்கடாட்சம் புரிந்து வருகிறார் இவர். இந்த வருடத்தில் இவருக்கான பிரமோற்சவம் வழமையைவிட அதிக சிறப்பம்சங்களோடு அமைந்துவிட்டதால், பக்தர்களுக்கு பெருமகிழ்ச்சி!

பன்னிரண்டுநாள் திருவிழா நிகழ்ச்சி நிரலில், அத்தனை நாட்களிலும் பகவானின்
பல்வேறு திருக்கோலங்கள் எழுந்தருள்வதும், அதற்கேற்ற ஆராதனை வடிவங்களை
அடியார்கள் பெறுவதும் விஷேச அனுபவங்களாகிறது.

சம்பிரதாய ஆரம்பமான கொடியேற்றத்தை, பக்தர்களோடு தனது சயனத்தில்
இருந்தவாறே ஏற்றுவிட்டு, அவதார முர்த்தங்களை பொழிவதற்காக வசந்த மண்டபத்திற்கு வந்துவிடுகிறார். அப்புறமென்ன, **2 ம்** நாளில் ஸ்ரீ ராமாவதாரக்காட்சி கிடைக்கிறது. **7 வது** நாள்வரை தொடர்கின்றது தரிசன அதிசயங்கள். லட்சுமி நாராயணர், அனந்த சயனர், அழகிய மணாளர், மோகினி வடிவம், குருவாயூரப்பன் என்று திருக்காட்சிகள் தொடரும். வழிபடத் திரள்கின்ற அடியார்களின் ஐம்புலன்களும் பக்தியால் நிரம்பிப்போகின்றன. கூடவே வெண்ணைத்திருவிழா, வேட்டைத்திருவிழா, கிருஷ்ண ஜெயந்தி, தேரத்திருவிழா, உறியடி உற்சவம், தீர்த்தத்திருவிழா என்று உச்சநிலைக்கு வந்து சேர்கின்ற உற்சவம் கொடியிறக்கம், சங்காபிஷேகம், திருக்கல்யாணத்தோடு நிறைவை எட்டுகிறது. இறுதி நாள் வைபவத்தின் நாயகனாக சிரஞ்சீவி ஆஞ்சநேயர் வந்துவிடுகிறார். பகவானைச் சேவிக்க வட்டக்கச்சி வந்து குவியும் பக்தர்களுக்கோ பரவசமான வைகுண்ட உலாதான் .. ஓம் நமோ நாராயணா!..



உற்சவ ஆரம்பம் :
30-08-2012
முடிவு :
10-09-2012

## ஆலய டிப்ஸ் சில ..



*சிவன் அபிஷேகப்பிரியர்!*
*விஷ்ணு அலங்காரப்பிரியர்!!*
*அம்பாள் நமஸ்காரப்பிரியை!!!*


*ஆதலால் சிவனை தரிசிக்கப்போகும்போது இயலுமானால் அபிஷேகப்பொருட்களையும் ( பால், தயிர், தேன் ) முதலியவற்றை எடுத்துச் செல்வது நன்று.*

*அதுபோல விஷ்ணுவை பார்க்கப் போகும்போது இயன்றளவு அலங்காரத்திற்கான பொருட்களையும் ( வஸ்திரம், புஷ்பம், வாசனைத்திரவியம் ) ஆகியவற்றைக் கொண்டு செல்வது நல்லது.*

*அம்பாளைப் பார்க்கப்போகும்போது மறக்காமல் நமஸ்காரம் செய்துவிட வேண்டும். இதனால் குளிர்ந்துபோய் பூரண ஆசியை அள்ளி வழங்குவாள் அம்பிகை!*

*முருகனோ அன்னதானப்பிரியர். விதவிதமாக உணவுகளை மடங்களில் சமைத்து, தொண்டர்கள் அடியார்களுக்கு பரிமாறும்போது பூரித்துவிடுகிறார் ..*








# பிரம்ம ஹத்தி தோஷம்!?



## தெய்வீகப் பிரசங்கம்!..

இம்மாதம் தருபவர்,
ஷண் ரவிச்சந்திர குருக்கள்



**இந்த தோஷம் யாது ..**

ப்ரம்ம ரிஷியாகிய சதாசிவனால் ரிஷிகளுக்கு உபதேசிக்கப்பட்ட வேத வாக்கியங்களில் கூறப்பட்டவைதான் ப்ரம்மஹத்தி தோஷம். இதற்கு எந்த விதமான பரிகாரங்களும் மனிதர்களால் செய்யமுடியாது. மானிடர்களாகிய நாம் தெரியாமல் செய்கின்ற பாவங்களால் இது ஏற்படுகின்றது. அதனை உணர்ந்து, வருந்தி மீண்டும் அந்த பாவத்தை செய்யாமல் திருந்துவதால் இறைவனாலேயே அதற்கு மன்னிப்பு கிடைக்கிறது.

அதே சமயத்தில் பாவம் என்று தெரிந்தும் அதைச் செய்யும்போது பிராயச்சித்தம் கிடையாது. படிப்பறிவற்ற, அறியாமையுள்ளவர்களின் பாவச்செயலை இறைவன் மன்னிக்கிறான். ஆனால் ஆன்மீகவாதிகள், அறிவுடையோர்கள் செய்யும் தவறுகளுக்கு என்றென்றும் மன்னிப்பு கிடையா.

துர்வாச மகரிஷியின் கோபத்தின் விளைவாக அவருக்கு ஒருசமயம் பிரம்மஹத்தி தோஷம் ஏற்பட்டது. அதனால் அவர் சிவபெருமானிடம் சென்று இதிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டுமென கேட்டார் சர்வேஸ்வரனும் அதற்கு, படைத்தல் கடவுளாகிய பிரம்ம தேவரிடம் சென்று கேட்கும்படி கூறினார். அவ்வாறே முனிவரும் நான்முகனிடம் சென்று வினவ, அவரும் பின்வருமாறு பதிலுரைக்கின்றார் ..

**பிரம்மஹத்தி தோஷம் வரும் பாவங்கள் ..**


**''இறைவனையும்,பூஜைப் பொருட்களையும், ஆலயத்தையும் நிந்திப்பது,**
**வேதங்களையும், ஆகமங்களையும் கற்றறிந்த அந்தணர்களை அவமதிப்பது,**
**சிவபூஜை செய்யும் சிவாச்சாரியர்களையும், வேதமும் தீட்சையும் கற்பிக்கும் குருவையும் ஏமாற்றுவது,**
**நம்பியவர்களை ஏமாற்றி துரோகமிழைப்பது,**
**தாய் தந்தையருக்கு மரியாதை செய்யாமை, கடைசி காலத்தில் அவர்களுக்கு உதவாமை, இறந்தபின் அவர்களுக்கு பிதுர்கடன் செய்யாமை,**
**இறைபணியை, சிவபூஜைகளை நிறைவேற்றுபவர்கள் தம்மை அழகுபடுத்திக்கொள்வது தவறு என்று தெரிந்திருந்தும் அதைச் செய்வது,**
**மற்றவர்களின் உடமையை தனதாக்க நினைப்பது, அதில் ஆசை வைப்பது,**
**கணவனின் தாய்தந்தையர்களின் பிதுர் கடமைகளை நிறைவேற்ற ஒத்துழைக்க தவறுபவள்,**
**இல்லறதர்மத்தில் கணவனோடு விலகி இருப்பவள், கணவனின் சிவ கைங்கர்யத் தொண்டுகளில் உதவிபுரியாமலிருப்பவள். பிள்ளைகளை பராமரிக்கத் தவறுபவள்,**
**மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் துரோகம் புரியும் கணவன், இறைபணி புரியாமலும், தான தர்மம் செய்யாமலும் இருக்கும் ஆண்மகன், உரிய காலத்தில் கன்னிகாதானம் செய்து கொடுக்காமல் இருக்கும் தந்தை, இதுபோன்று மனைவியின் நற்செயலுக்கு உதவி புரியாமல் இருக்கும் கணவன், பிள்ளைகள் ஆகியோர் பிரம்மஹத்தி தோஷத்திற்கு இலக்காகின்றனர.. ..''**

இவ்வாறு விவரித்த பிரம்மாவிடம் இதிலிருந்து விடுபட யாது செய்யவேண்டுமென துர்வாசர் கேட்கவே பிரம்மாவும் ..

**''இத்தகைய பாவங்களைப் புரிந்தவர்கள் மனம்விட்டு வருந்தி, இறைவனை பூஜிக்கவேண்டும். தமது தவறுகளை பஞ்சபூதங்களிடமும், கற்புள்ள மாதர்களிடமும் பகிர்ந்து கொள்தலும் சிறிதுசிறிதாக பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபட வாய்ப்பை அளிக்கிறது. கங்கையிலும், அதுபோன்ற புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி, வேறு எவ்வித சிந்தனையுமின்றி, சிவனை மனதில் நினைத்து, தன்னை மறந்து சிவத்தியானத்தில் ஈடுபட்டால் பிரம்ம ஹத்தி தோஷத்திலிருந்து முழுமையாக விடுபடலாம் ..''** என்கிறார்.

பிரம்மஹத்தி தோஷ அபாயத்திலிருந்து விடுபடுவது பெண்களைப் பொறுத்தவரையில் எளிதாவதற்கு வழியிருக்கிறது. எப்படியெனில், அவர்கள் தாயாக, தாரமாக இருந்து தந்தை, கணவன், பிள்ளைகளுக்கு செய்யும் பணிவிடைகள் மூலமும், சிவபூஜை, பிதுர்கடன்களில் உதவி புரிபவளாகவும், குழந்தைகளைப் பெற்று தாய்மை அடைபவளாகவும் இருப்பதால் இப் பிரம்மஹத்தி தோஷத்திலிருந்து விடுபடுகிறார்கள்.

பணிவான நன்றிகள் ..
ஷண் ரவிச்சந்திர குருக்கள்,
(பிரதம குருவும் சோதிடரும்)
அம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்




இந்த அருமையான மாதத்தை 'கன்னிமாதம்' என்றும் செல்லமாக பெயரிட்டு அழைப்பர் ..

காரணம், சூரியன் இந்த மாதத்தில் கன்னி ராசிக்கு வந்துவிடுகிறது!

**''கன்னித்திங்கள் வருகுது ஐயா,**
**காசு பணம் சேர்க்க வேண்டும் ..''**

என்று வீடுகள்தோறும் பாடிக் கோலாட்டம் போடுவார்களாம். இப்பாடலைப் பாடியவாறு பாடசாலைக்கு பொருள் சேர்ப்பதை சிறுவயது அனுபவமாக இன்றும் பலர் நினைப்பதுண்டு ..

இன்று பன்னிரண்டு ராசி மண்டலங்களைக் கொண்டு விளங்கும் ராசிகள் அக்காலத்தில் அப்படியிருக்கவில்லை. அப்போது எட்டு ராசிகளைக் கொண்டு மட்டுமே ராசி மண்டலம் விளங்கியது. இதில் முக்கிய இடத்தை வகிப்பது கன்னி ராசியாகும். வேதங்களுள் முதலிடம் வகிக்கின்ற ருக்கு வேதம்கூட இதனை ஏற்றுக்கொள்கிறது.

### *நவராத்திரியின் நுழைவாயில்! ..*

கன்னி மாதமாகிய இக்காலத்தில் தேவி வழிபாடு வரும் பொருத்தத்தை நினைக்கையில் ஏற்படுகின்ற ஆனந்தமே தனி. நாடு நகரமெங்கும் சக்தி வழிபாடு களை கட்டும். 'வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள் ..' என்ற கலைமகளின் துதிப்பாடல்கள் பட்டி தொட்டியெல்லாம் ஒலிக்கும்..

இந்த வழிபாடு எப்போது இவ்வுலகத்தில் தோன்றியது என்ற கேள்விக்கு பதில் கூறமுடியாது. அவ்வளவு தொன்மை வாய்ந்தது இது. வட இந்தியாவில் ***'தசரா'*** என்று பெயரிட்டு கொண்டாடும் இந்த வழிபாடு பெரும் பண்டிகையாக கோலாகலமுறும். மைசூரிலும், வங்காளத்திலும் இந்த விழா கொண்டாடப்படும் வேளைகளில் முழு இந்தியாவின் கவனமே இங்கு குவிந்துவிடும்.

பண்டைய பூஜைகளில் மிகச்சிறந்ததாக விளங்கும் இதனை மதவேறுபாடுகளைக் கடந்து கொண்டாடுபவர்கள் அநேகர். இன்னும் சொல்லப்போனால், சிற்சில பெயர் மாற்றங்களுடன் இந்த சக்திவழிபாடு உலகம் முழுவதுமே பரவியிருந்திருப்பதையும் அறிய முடிகிறது.

### *ஒரு சிவராத்திரியும், ஒன்பது நவராத்திரியும்! ..*

புரட்டாதி மாதத்தில் வருகின்ற அமாவாசையைத் தொடர்ந்துவருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரியாகும். பத்தாவது விஜயதசமியாகும். எம்பெருமான் சிவனுக்கு உகந்த சிவராத்திரி ஒரு ராத்திரியிலேயே முடிந்துவிடுகிறதென்றால், அம்பிகைக்குறிய நவராத்திரியோ ஒன்பது நாட்களுக்கு நீடிக்கிறது. சக்தி வழிபாட்டின் மேன்மைக்கு இது சான்று.

**தமிழரின்** வளமும், பெருமையும் தாங்கி நிற்கின்ற மண்ணை 'நிலமகள்' என்பார்கள். இதைப்போலவே செல்வத்தை திருமகள் என்றும், கல்வியை கலைமகள் என்றும், வீரத்தை திருமகள் என்றும் குறிப்பிட்டு வணங்குகிறார்கள். இதனை மூன்றுநாள் வழிபாடாக வகைப்படுத்தி ஒன்பது நாட்களிலும் நோன்பிருந்து பூஜிக்கின்றார்கள். மும்மூன்று இரவுகளாக மூன்று தேவியரும் தோன்றி ஒன்பது இரவுகளிலும் உலகத்தை ரட்ஷிக்கிறார்கள். வீரம், செல்வம், கல்வி இம்மூன்றும் இல்லாமல் உலக மாந்தரால் வாழமுடியாது என்பதால், இதனை வேண்டி மேற்கொள்ளப்படுகின்ற இந்த வழிபாடு அதி சிறப்பானது. முதல்மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்கைக்காகவும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலட்சுமிக்காகவும், கடைசி மூன்று நாட்களும் கல்வியை வேண்டி சரஸ்வதிக்காகவும் நவராத்திரி அனுஷ்டிக்கப்படுகின்றது. பத்தாவது நாளின் சிறப்புக்கு எல்லையே இல்லை. வெற்றித்திருநாள் என்று அனைவராலும் விரும்பப்படும் இந்நாளே விஜயதசமி ஆகும். அன்பே உருவான தேவி, பராசக்தியாக தோன்றி கொடூரமான மகிஷாசுரனை வதைத்த நாள் இதுவே!

# வெற்றியின் ரகசியம்.. விஜயதசமி!..

**மகிஷாசுரனை** அழித்ததன் மூலம் தேவி நமக்குச் சொல்லும் செய்தி என்ன? ..

***'மகிஷம்'*** என்றால் தாமச குணமாகும். தாமச குணம் என்ற அரக்கனை நமக்குள்ளே அழித்து, சாத்வீக குணத்தை நமக்கு அருள்வதாகவே இந்த மகிஷாசுர வதத்தை விஜயதசமியிலே ஆதிபராசக்தி நடத்துகிறாள். ஆதலால், இத்தினத்தின் மேன்மையை வர்ணிக்க வார்த்தைகள் போதாது.

இப்புனித நாளில் சகல ஆயுதங்களுக்கும், கருவிகளுக்கும் ஓய்வு வழங்கி அவற்றுக்கு பூஜை செய்வர். இதனையே ***'ஆயுத பூஜை'*** என்றும் அழைப்பர்.

புதிய தொழில்கள், கலைகள், முதலீடுகள், முயற்சிகள் யாவுமே இத்திருநாளில்தான் ஆரம்பிக்கப்படும். கல்வியை தொடங்க இருக்கும் சிறார்களுக்கு இத்தினத்திலேயே வித்தியாரம்பம் நிகழும். இதனையே ***'ஏடு தொடக்குதல்'*** என்றழைப்பர்.


நவராத்திரி நிறைவும், விஜயதசமியும் சேர்ந்த இந்த நாளில் எந்த மனதிலும் குறை இருக்காது. ஆனந்தமும், தன்னம்பிக்கையும் பெருக்கெடுக்கும்.




நவராத்திரியில் வருகின்ற அஷ்டமி மஹாஷ்டமி என்றும், நவமி மஹாநவமி என்றும் பெயர் குறிப்பிடுவர். இதனாலேயே இதனை மஹாநோன்பு என்றும் மகர் நோன்பு என்றும் அழைப்பர். சரத்கால சம்பந்தம் பெற்ற ஆச்வின மாதத்தில் வருவதால் இதற்கு சாரத நவராத்திரம் என்றும் பெயருண்டு. இதுபோல் சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரம் கொண்டாடப்படுகின்றது. பருவகாலங்களாகிய சரத்து, வசந்தம் இரண்டும் எமனுடைய கோரைப்பற்கள் என்றும் வர்ணிக்கப்படுகிறது. இக்காலங்களில் நோய்நொடிகள் பெருகி மக்கள் பெரிதும் துன்புறுவர். இதனாலேயே இக்காலத்தில் நடத்தப்படுகின்ற தேவிபூஜைகளால் மக்களைக் காக்கலாம் என்று அம்பிகை புராணம் கூறுகிறது ..

# தரணியெங்கும் கலைகள் பொங்கும் தருணமிது ..

**நவராத்திரி** என்றாலே கொலுவும், பொம்மைகளுமே மனக்கண்ணில் தோன்றும். ஆனால் இந்த கலையழகை இல்லங்களில் நிறைக்கும் வழக்கம் நம் நாட்டில் மிகவும் அரிது. இதைத்தவிர பெரும்பாலும் சிறப்பாகவே நவராத்திரி இங்கே அனுஷ்டிக்கப்படுகிறது. சக்தி வழிபாட்டில் கொலு வைக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. இப்பண்டிகை பிரதிபலிக்கும் முக்கிய அம்சமே கலையார்வத்தை வெளிப்படுத்துவதுதான். இந்திய மாநிலங்களில் விதவிதமாக கொண்டாடப்படுகின்ற இவ்விழாவில் கலைஞர்களின் பிரசன்னம்தான் அதிகளவில் காணப்படும். பஞ்சாப், உத்தரப்பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் ராம லீலையும், வங்காளத்தில் காளி பூஜையும், மைசூரில் சாமுண்டீஸ்வரி வழிபாடும் மிகவும் பிரபலம் மிக்கவை. ஒன்பது இரவுகளில் சக்தியாக அருள்பாலித்த அன்னை, பத்தாம் நாளில் சிவத்தில் இணைந்து அர்த்தநாரீயாகிவிடுகிறாள் ..



## நதி[illegible]லிருந்து ஒன்பது [illegible] கன்னிகள்! ..

**ஸ்ரீராமபிரானின்** மூதைதையரில் வந்த ஒருவரே இந்த விழாவை அனுஷ்டித்திருக்கவேண்டும் என்றும் ஒரு ஐதீகமுண்டு. ஒரு அமாவாசை இரவில் ஆரம்பித்து, பாரதத்தின் புண்ணிய பூமியில் ஓடும் ஒன்பது நதிகளிலிருந்து ஜலத்தை ஒன்பது குடங்களில் சேகரித்து வந்து, அவைகளில் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாஹனம் செய்து, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப்பெண்ணாய் தேவியை புஜித்து வந்துள்ளார்.

சரஸ் என்றால் நீர் என்றும், ஒளி என்றும் அர்த்தம் உளதாம். ஒளியைத் தருவதால் சூரியனுக்கு 'சரஸ்வான்' என்றும் பெயருண்டு. தடையின்றிப் பிரவாகமெடுப்பதற்கு 'சரஸ்' என்று பொருளுண்டாம். தங்கு தடையியில்லாத புலமையை அதனால்தான் தேவி அருள்கிறாளோ?

## வன்னி மரத்தின் அற்புத சக்தி! .



**ராஜ** குடும்பத்தவர்கள் விஜயதசமியிலே வன்னி மரத்தடிக்குச் சென்று அம்மரத்தை பூசை செய்வார்கள். இந்நிகழ்ச்சியை தழுவியே அன்றைய தினத்தில் அம்பு போடும் உற்சவம் இடம்பெறுகிறது. பாவங்களையும், சத்துருக்களையும் அழிக்கக்கூடிய சக்தி வன்னி மரத்திற்கு உண்டாம். இன்னும் ஒருபடி மேலே போய் துர்க்கையின் அம்சமாக வன்னி மரத்தை வர்ணிப்பார்கள்.

அஞ்ஞாத வாசத்தின்போது பாண்டவர்கள் தங்களின் ஆயுதங்களை வன்னி மரத்தடியில் மறைத்து வைத்திருந்தனர். போரின்போது அவைகளை எடுத்து சண்டையிட்டு வெற்றியடைந்தனர்.

வங்க மொழியிலே ராமாயணத்தை எழுதிய கிருத்தியவாய் என்ற கவி, இராவணனைச் சங்கரிக்க ஸ்ரீராமபிரான் சக்தியை வழிபட்டிருக்கிறார். அதன்பொருட்டே வங்கதேசத்தில் நவராத்திரியை கொண்டாடுகின்றனர் என்றும் கூறப்படுவதுண்டு.



# யமனின் உத்தரவும், பிதுர்களின் மகிழ்வும்! ..

**மகாளயச்** சிறப்புக்கு பெயர்பெற்ற மாதம் இந்த புரட்டாதி மாதம். பெரிய அளவில் இருப்பை தருவது -- அல்லது, சந்தோஸம் தருகின்ற காலம் என்பது இந்த மகாளயத்தின் பொருள். மேன்மைக்குறிய நம் பித்ருக்கள் பூமிக்கு வந்து பதினைந்து நாட்களுக்கு நம்முடன் இருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இக்காலமானது இங்கே அவர்களின் இருப்பிடமாதலால் மகாளயம் என்ற அர்த்தமும் ஏற்படுகிறது. சூரியன் கன்னி ராசியில் புகுந்தபோது, ஆஷாடம் முதலாக ஐந்தாவது அமர பட்ஷம் வரை யமதர்மராஜன் தன்னிடமுள்ள பிதுர்க்களை பூமிக்குச் செலலும்படி உத்தரவிடுகிறார். அதன்படி பிதுர்க்கள் வந்த அந்த பதினாறு நாட்களுமே மகாளய விதிப்படி அன்ன சிரார்த்தம் செய்யவேண்டும். அல்லது ஹிரண்ய சிரார்த்தமாவது செய்து ஒருநாள் மட்டும் மகாளயம் செய்து மற்ற நாட்களில் தர்ப்பணம் செய்யலாம். இதுவும் முடியாதவர்கள் மாத்ரு,பித்ரு, திதி அல்லது மஹாபரணி, விசதீபாதம், மத்யாஷ்டமி முதலிய புண்ணிய காலங்களிலாவது ஹிரண்யமாக செய்வது விஷேசமாகும். தனவுள்ளம் கொண்டவர்களுக்கு பணத்தால் கிடைக்கும் நன்மைகளையும் தர்ம சாஸ்திரம் விவரித்து கூறுகிறது ..



## புண்ணியம் தருமே

புரட்டாதி மாதம்!..



**தேவர்களை** ஆராதிக்கும்போது நம் வாழ்வில் சௌபாக்கியத்திற்கு குறைவிருக்காது. பித்ருக்களை திருப்தி செய்வதும், தேவர்களை ப்ரீதி செய்தலும் முக்கியமாகும். இதற்கான ஹோமங்கள், யக்ஞங்கள் உள்ளன. சிரார்த்தம். தர்ப்பணம் ஆகியவற்றை பித்ருக்களின் திருப்திக்காக செய்கிறோம். தெய்வ காரியங்களில் பக்தி எப்படியோ, அதுபோல பித்ருக்களின் காரியங்களில் சிரத்தை இருக்கவேண்டும். சிரத்தையாக செய்வதையே சிரார்த்தம் என்ற சொல் குறிக்கிறது. சிரத்தை என்பது பாவத்தை அகற்றவல்லது. சிரத்தையின்மையே பெரும் பாவமாகும். சிரத்தை இல்லாதவன் தேவர்களுக்கு நிவேதனம் அளிக்கத் தகுதியற்றவன் என்றும், சிரத்தையுடன் அளிக்கும் அன்னத்தைத்தான் அதிதி உண்ண வேண்டுமென்பதும் நியதி ..

**பிதுர்களுக்கு** நாம கொடுக்கும் சிரார்த்தம், அவர்களுக்கு தினமும் உணவு கொடுப்பதைப்போலவே பலன் தரும். ஏனெனில் நமக்கு ஒரு வருடம் என்பது அவர்களுக்கு ஒரு நாள்தான். மகாளய பட்சத்தில் எல்லா தேவதைகளையும் திருப்தி செய்யவே மகாளய சிரார்த்தம் செய்யப்படுகிறது. அமாவாசையில் எள்ளும், தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் செய்வது, அவர்களின் தாகத்திற்கு தண்ணீர் தருவதற்கொப்பானதாகும். சிம்ம, கன்னி ராசிகளில் சூரியன் பிரவேசித்தவுடன் பிதுர் தேவதைகள் எமதர்மனிடம் விடைபெற்றுக்கொண்டு தத்தமது குடும்பத்தாரோடு தங்க வந்துவிடுகிறார்களாம்.

மகாளயம் என்பதற்கு எல்லா பிதுர் தேவதைகளும் ஒன்றுகூடுவதென்றும் பொருள்படுகிறது. ஹிந்துமதம் கூறுகின்ற ஐம்பெரும் வேள்விகளில் பித்ரு வழிபாடும் ஒன்றாகும். 'தென்புலத்தார்' என்ற சொல்லால் பிதுர்க்கள் அழைக்கப்படுவதும் பெருமை தரும்!

# காகம் உண்ண மறுத்தால், தவிக்கும் அடியவர்கள்!..



**புரட்டாதி** மாதமென்றாலே சனிபகவானின் ஞாபகம் வராமல் போகாது. ஏனெனில், புரட்டாதி மாதத்திற்குறிய விஷேட நாள் என்றால் அது சனிக்கிழமைதான்!

## தூய உணவால் நற்பண்புகள்!

**ஆலயங்கள்தோறும்** கறிகாய் வகைகளை கட்டித் தொங்கவிட்டு நிறைபணி விழாவை கொண்டாடுவது, இந்த புரட்டாதி மாதத்தில் வருகின்ற பௌர்ணமி நாளில்தான்! கடவுள் நமக்காக இவ்வளவு தாவர உணவுகளை படைத்திருக்கிறார் .., அதனால் நமது பசி தீருகின்றது என்பதை இந்த விழா உணர்த்துகிறது. எல்லாவித சத்துக்களும் இந்த தாவர உணவில் இருக்கும்போது எதற்காக புலாலுக்காக உயிர்களைக் கொல்லவேண்டும் என்ற கேள்வியையும் இது கொண்டிருக்கிறது.

எது அறம் என்ற கேள்விக்கு திருவள்ளுவப்பெருமான் 'கொல்லாமை' என்று பதிலளிக்கிறார். நெய்யைத் தீயில் சொரிந்து செய்கின்ற ஆயிரம் யாகங்களின் பலனைவிட, ஒரு உயிரைக் கொல்லாமலிருப்பதால் கிடைக்கும் பலன் உயர்ந்தது என்று தனது குறளில் கூறியிருக்கிறார்.

**'உணவில் இருக்கின்ற தூய்மையே நற்பண்புகள் வளர முக்கிய காரணமாகின்றன' என்று முனிபுங்குவர்கள் கூறியிருக்கிறார்கள். உணவுக்கும், மனநிலைக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது.**

புரட்டாதி மாதம் கற்றுத்தருகின்ற இந்த தத்துவம் அவசியம் கடைப்பிடிக்கவல்லது. மாமிச உணவில்லாமலேயே மனிதன் சிறந்த ஆரோக்கியத்துடன் வாழ முடியும் என்பதைக் காட்டுகிறது இவ்விழா!

பிரச்சினைகளிலிருந்து விடுபட இந்த மாதத்திற்காக காத்திருப்பார்கள் -- சனி பகவானை திருப்திப்படுத்துவதற்காக.

இந்த மாதத்தில் வரும் எல்லா சனிக்கிழமையிலும் விரதமிருந்து, சனி பகவானை வழிபட்டு, அவரின் வாகனமாகிய காகத்திற்கு உணவு படைத்து, அது உண்டபின்பே தாம் உண்ணும் அடியார்கள் அளப்பரியர். காகம் வராவிட்டாலும், வந்தாலும் உண்ணாவிட்டாலும் அது உண்ணும்வரை காத்திருக்கும் இந்துக்களை காணும்போது இதயம் பெருமிதம் கொள்ளும். சில வீடுகளில் படைக்கின்ற உணவுகளை காகம் உண்ணாமல் இருக்கும்போது அந்த அடியார்கள் தவித்துவிடுவர். தாம் சமைத்ததிலும், படைத்ததிலும் குறை நேர்ந்திருப்பதாக கருதி, மீண்டும் புதிதாக சமைப்பவர்களும் உண்டு. மீண்டும் காகத்தை அழைத்து, அது உண்டபின்பே தாம் உண்பர். புரட்டாதி மாதத்தின் கடைசி சனிக்கிழமை சனி விரதத்தின் மகிமைக்கு சிகரம் வைத்ததுபோல இருக்கும். அன்று சனிபகவானுக்கு எள், எண்ணை எரித்து விரதத்தை நிறைவு செய்வார்கள் ..

தேவியர் சிறப்புகள்!





## கோமதி அம்மனை அறியுங்கள்!..

சிவனும், சக்தியும் இணைந்த வடிவம் நமக்கெல்லாம் தெரியும் அல்லவா! ஆனால் சிவனும், விஷ்ணுவும் இணைந்த கதை எல்லோருக்கும் தெரியுமா? ..

தெரிந்திருந்தால் இந்த கோமதி அம்மனையும் தெரிந்திருக்கும் ..

ஒருநாள் உமாதேவிக்கு ஒரு எண்ணம் உதித்தது.. 'சிவபெருமானும், மகாவிஷ்ணுவும் இருவேறு பிரபஞ்ச சக்திகளாகவே திகழ்கிறார்களே, இருவரும் இணைந்த கோலத்தில் அருள்புரிந்தால் உலகம் இன்னும் குதூகலம் கொள்ளுமே ..' என்று உள்ளுக்குள் மகிழ்ந்தாள். அவர்கள் இருவரும் பொருந்தி அருள்பாலிக்கும் காட்சிதனை காண விரும்பினாள்.

ஐயனுக்கும் பார்வதியின் உள்மனம் புரிந்தது. இந்த ஆசை தான் மட்டும் காண்பதற்கு அல்ல, சிவனும், விஷ்ணுவும் இருவேறு கோணங்கள் என்று பேதமையாக கருதும் பக்தர்களுக்காவே என்றும் அறிந்தார்.

தாம் இருவரும் இணைந்த கோலத்தில் தென்படும்போது தமது பக்தர்களிடையே ஏற்படும் வாக்குவாதங்களும், பேதங்களும் இல்லாமல் போவதற்கு வழி பிறக்கும் என்பதையும், இருவருமே சமமாக உயிர்களை பாலிப்பவர்களே என்று காண்பிக்க முடியும் என்றும் இறைவன் உணர்ந்தார்.

அன்னையின் கோரிக்கையை ஏற்று மகா விஷ்ணுவை வரவழைத்தார் பெருமான். பூவுலகம் மகிழ, தேவியின் வேண்டுகோளை வெளிப்படுத்தினார்.

தங்கையின் விருப்பத்தை மறுப்பாரா ஸ்ரீ ஹரி?
அதுவும், முழுமுதற் பரம்பொருளுடன் இணைவதென்றால் கிடைக்கின்ற பாக்கியமா! உடனேயே ஒப்புக்கொண்டார்.

இணைவதற்கு முன்னர், சிவபிரான் பார்வதி தேவியிடம் ஒரு விண்ணப்பத்தையும் முன்வைத்தார் ..

"பொதிகைமலை அருகே நீ புன்னைவன தலத்தில் வேண்டியபடியால், உன் விருப்பப்படியே நாங்கள் இணைகிறோம். அதேபோல எங்கள் இருவருக்கு நீயும் மகா சக்தியாக காட்சிதர வேண்டும் .." என்றார்.

அவ்வாறே அன்னையும் இசைந்து காட்சி தந்து கோமதி எனப் பெயர் பெற்றாள்.

சிவனும், திருமாலும் இணைந்த கோலத்தில் சங்கர நாராயணன் ஆனார்கள். அகிலமே ஆனந்தத்தில் மூழ்கியது ..

## புரட்டாதி மாத குருபூசைகள்! ..

1. ஏனாதிநாதர்
2. நரசிங்கமுனையரையர்
3. உருத்திரபசுபதியார்
4. திருநாளைப்போவார்
5. அருணந்தி சிவாச்சாரியார்
6. கடையிற்சுவாமிகள்

# கற்கடேஸ்வர நாதர்!



## சிவனை பூஜித்த நண்டு!



**உ**லகாளும் ஈசனின் திருநாமங்கள் நட்சத்திரங்களைப்போல எண்ணற்றவை! அடியார்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு, அவர் புரியும் புதுமைகளும், விளையாட்டுக்களும்கூட அவருக்கு மென்மேலும் நாமங்களை உருவாக்கிவிடுகின்றன!

கற்கடேஸ்வரர் என்ற பெயரையும் இறைவன் பெற்றதற்கு காரணமானவர்கள் கடக ராசிக்காரர்கள் என்று சொன்னால் பலரும் ஆச்சரியப்படுவீர்கள். ஆம், உயிர்கள் யாவற்றிற்கும் தந்தையான சிவபிரானின் பிரியம் ஒரு நண்டுக்கும் கிடைத்தபோது இந்த கற்கடேஸ்வரர் பிரசன்னமானார்.

கடக ராசிக்காரர்களுக்கு-- அதிலும் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இந்த கற்கடேஸ்வரர் பெரும் அரணாக இருந்து அருள்புரிகிறார். அவர்கள் தங்கள் வாழ்நாளிலோ, அல்லது பிறந்த நட்சத்திரத்திலோ இவரை வழிபட்டு வந்தால் சௌபாக்கியங்கள் பெறுவர்.

நமது நாட்டில் கற்கடேஸ்வரர் ஆலயங்களும், அவரின் தரிசன பலன்களும் அரிதாக இருந்தாலும், கடக ராசிக்காரர்களுக்கு இந்த பெருமானின் தகவல்கள் நிச்சயமாக மகிழ்வளிக்கும்!

## துர்வாசரின் சீற்றம்!

**மகா** கோபக்காரரான துர்வாச முனிவர் ஒரு நாள் சிவபூஜை செய்துகொண்டிருந்தார்...

அச்சமயத்தில் அவ்வழியாக கந்தர்வன் ஒருவன் வந்தான். அவன் முனிவரை கேலி செய்யும் முகமாக நண்டுபோல நடந்து கிண்டல் செய்தான். இதனால் கோபமுற்ற துர்வாசர் அந்த கந்தர்வனை **''நீ நண்டாக மாறக்கடவது ..''** என்று சபித்தார். இதனால் வருந்திய கந்தர்வன் மன்னிப்புக் கேட்டு, சாபவிமோசனம் வேண்டினான். மனமிரங்கிய மகரிஷி அவனை சிவபூஜை செய்துவருமாறு பணித்தார்.

நண்டு வடிவமாகவே பெருமானை மலரால் அர்ச்சித்து வந்து விமோசனம் பெற்றான் கந்தர்வன். இறைவனின் திருமேனியில் ஏறி சிரசில் பூ வைத்து அர்ச்சித்ததால் கற்கடகம் (நண்டு) ஆனான். இதையொட்டி இறைவனும் கற்கடேஸ்வரர் ஆனார். இந் நிகழ்ச்சி நடந்த இடத்தை தரிசித்து இன்றும் பக்தர்கள் இன்புற்று வருகிறார்கள். அருள்மிகு கற்கடேஸ்வரம் என்ற பெயரோடு இத் திருக்கோயில் தமிழ்நாட்டில் அமைந்திருக்கிறது.

இந்த புராணச் சம்பவத்தில் கிடைக்கின்ற தகவல்கள் வெகு சுவாரஸ்யமானவை ..

**கா**விரி ஆற்றின் வடக்கு கரையில் அமைந்துள்ளது இந்த அழகான கோயில். இதனைச்சுற்றி ஆழமும், அகலமுமாக பெரிய அகழி! அதில் பூத்துக்கிடக்கும் தாமரை மலர்களோ ஆயிரக்கணக்கில்! ..
ஒருநாள் இந்த இடத்திற்கு இந்திரன் வந்தான் ..

ஆம், அவன் தேவேந்திரன் எனப் புகழ் படைத்த அமரர்களின் தலைவன்!

தனது குருவின் ஆலோசனைப்படி ஆணவம் நீங்க சிவபூஜை செய்வதற்கேற்ற பொருத்தமான இடத்தைத் தேடி, தனது ஐராவதத்தில் வந்துகொண்டிருந்தான். வானில் தூரத்தே வரும்போதே பூமியில் தெரிந்த ஒரு அற்புத ஒளியால் கவரப்பட்டான். ஆர்வத்தோடு இறங்கிப் பார்த்தபோது அந்த இடம் ஒரு சிவாலயம் என்று தெரிந்தது. அம்பலக்கூத்தனின் உறவிடம் என்றாலே அதன் எழிலும், அமைதியும் சொல்லக்கூடுமோ! ..

பூவுலகில் நிலைகொண்டிருக்கும் சிவாலயங்களின் ஆனந்தத்திற்கு நிகராக தம் வானுலகிலும் கிடைக்காதே என்று மலைத்தான். இப்படியான வனப்புமிக்க சூழலில் வதியும் ஈசனுக்கே தினமும் தனது சிவபூசையை அளிக்க முடிவு செய்தான் இந்திரன். அவனது இதயத்தில் பெருமானின் கருணையை எண்ணிப் பேரானந்தம் ஏற்பட்டது.

அதிலும், ஆலயத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கில் பூத்துக்கிடந்த தாமரைகள் அவனின் சிந்தையை கொள்ளை கொண்டன. காரணம், பெருமானின் மலரார்ச்சனைக்கு இதைவிட சிறந்த பூக்கள் எங்கிருந்தும் கிடைக்கா.

மறுநாளே தனது ஐராவதத்தின் மீதேறி அதிகாலையிலேயே பூவுலகம் வந்து சேர்ந்தான் தேவேந்திரன். சிவ அன்பில் நனைந்தவாறு ஆலயத்தை நெருங்கினான். சாஷ்டாங்கமாக விழுந்து பரம்பொருளை சேவித்துவிட்டு, அகழிக்குள் இறங்கினான்.

# மாயமான மலர்கள்!

## இந்திரனின் பூஜையைக் குழப்பியது யார்?



ஆயிரக்கணக்கில் புதிதாய் பூத்துக் கிடந்த தாமரைகளை பரவசத்தோடு வாரியெடுத்தான். சரியாக **1008** மலர்களை பறித்துக்கொண்டு நீர் சொட்ட கர்ப்பக்கிரகம் அணுகினான். **'ஓம் சிவாய நம ..'** என்று சப்த நாடியும் ஒடுங்க பெருமானுக்கு புஷ்பார்ச்சனை செய்தான். விண்ணும், மண்ணும் நிர்வாகம் புரியும் தேவலோக அதிபதி, தான் என்ற அகந்தை நீக்கும் சிவவழிபாட்டில் மட்டில்லா பேரின்பம் கண்டான்.

இப்படியே நாட்கள் கடந்தன. இந்திரனின் அதிகாலை வருகையும், தடாகத்தில் பறித்தெடுத்த **1008** மலர்களின் சிவ அர்ச்சனையும் தப்பாமல் நடந்தன.

ஒருநாள் காலை இந்திரனுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. **1008** மலர்களை எண்ணிப் பறித்தபோதெல்லாம் ஒரு மலர் குறைந்துகொண்டே வந்தது. இதனால் வியப்புற்றவன் மீண்டும் மீண்டும் பறித்து எண்ணும்போதும் ஒரு தாமரை குறையவே செய்தது. ஒரு மலர் குறைந்தாலும் அபசாரம் ஆகிவிடுமே என்று பயந்த தேவேந்திரன், தனக்குத் தெரியாமல் யாரோ மலர்களை பறிப்பதாக உணர்ந்தான்.

மறுநாளும், அதற்கு மறுநாளும் இதேபோல் மலர்கள் குறைவது தொடர்ந்தது. தன்னை **1008** மலர்களால் பூஜிக்க விடாமல் செய்பவர்கள்மீது சினம் கொண்டான் தேவர் தலைவன். அவர்களைக் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். குறிப்பிட்ட ஒரு தினத்தில் ஆத்திரத்தோடு வஜ்ஜிராயுதத்தை கையில் எடுத்துக்கொண்டு யாருக்கும் தெரியாமல் அகழியைக் கண்காணித்தான். சிவராத்திரிக் கொப்பான நள்ளிரவுக் கண்விழிப்போடு விடியற்காலையை எதிர்பார்த்திருந்தான் ..

**'எனது இறைவனின் பூஜைக்கு இன்னல் விளைவிப்போரை இன்று கண்டுபிடிப்பேன், தண்டிப்பேன்! ..'** என்று சபதமேற்று நள்ளிரவிலிருந்து தடாகத்தில் காவலிருந்தான் அமரவேந்தன்.

இதோ, அதிகாலை நெருங்கிவிட்டது.

மொட்டுப் பருவத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு, மலர்கள் ஒவ்வொன்றாக விரிய ஆரம்பித்தன. கையில் பளபளக்கும் வஜ்ஜிராயுதத்துடன் உஷாரானான் வானவர் தலைவன். அப்போது --

முதலாவது மலர் விரிந்தபோது அவன் கண்ட காட்சியால் அதிர்ந்துபோனான்!

**( முடிவு அடுத்த விஜயத்தில் ..)**




கல்வி வரம் தருகின்ற
அற்புத தெய்வம் இவர் ..

# ஹயக்ரீவர் ..

"ஞானானந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம்
ஆதாரம் சர்வ வித்யானாம் ஹயக்ரீவம் உபாஸ்மகே .."
-- மாணவர்களுக்கான மந்திரம்!

சூதர் பெரும் ரிஷி! ..

அவர் வியாசரிடமிருந்து அரிய விஷயங்களைக் கற்றிருந்தார் ..

நைமிசாரணியத்தில் இருந்த முனிவர்கள் சூதரிடமிருந்து பல விவரங்களைத் தெரிந்துகொண்டு வந்தபோது ஒருநாள் ..

" சுவாமி, தேவி பாகவதத்தைப் பற்றி கூறுங்களேன் .." என்று வேண்டினார்கள்.

சூதரும் ஒப்புக்கொண்டு ஆதிபரா சக்தியை பற்றிக்கூறலானார் ..

ஆதி பராசக்தி மிகவும் சக்தி வாய்ந்தவள். உலகமே அவளிடம் அடைக்கலம் அடைந்திருக்கிறது. சிருஷ்டியை அசைய வைப்பவளும் அவளே! அவளின் சைகையிலேயே மும்மூர்த்திகளும் நடப்பார்கள்.

பிரம்மா விஷ்ணுவிடம் பிறந்தவர். விஷ்ணு ஆதிஷேசனில் உறங்குபவர். ஆதிஷேசனும் நீரில் மிதப்பவர். அந்த நீரைத் தாங்குபவள் ஆதி பராசக்தி! ..


அப்படிப்பட்டவளின் கதையே தேவி பாகவதம்.


அம்பிகையின் நாமங்களை அகத்தியர் வாயிலாக லலிதா சஹஸ்ரநாமமாக வெளிப்படுத்தியவர் ஹயக்ரீவர்!

வெண்தாமரை மீதமர்ந்து வெண்கலைகளையே தரித்து, வித்தைகள் யாவும் விரைந்தளிக்கும் கல்விக் கடவுளாம் சரஸ்வதியின் தாரக குருவானவர் ஹயக்ரீவர்.

படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவனின் நாவினையே இருப்பிடமாகப் பெற்ற சரஸ்வதிக்கே ஞானக்குருவாகிய ஹயக்ரீவரின் பெருமை சொல்லற்கரியது ..

சந்தோஸம் இன்றிருக்கும், நாளை இருக்காது. ஆனந்தம் அப்படியல்ல. அது என்றும் இருக்கும் அப்படிப்பட்ட ஆனந்தம் ஞானத்தால் கிடைப்பது. அந்த ஞானத்தை அடைய ஹயக்ரீவரை தியானிக்க வேண்டும்.





அறியாமை என்னும் இருளிலிருந்து ஞான ஒளி கிடைக்கும் வழியில் நம்மை அழைத்துச் செல்கிறார் ஹயக்ரீவர். அலையாழி அறிதுயிலும் அந்த மாதவனின் அவதாரமே ஹயக்ரீவர் ..

அன்றொருநாள் பிரம்மா தனது சிருஷ்டியை நடத்திக்கொண்டிருந்தார். அவரின் படைப்புத் தொழிலுக்கு அரணாய் இருப்பது நான்கு வேதங்களுமன்றோ ..

அப்படியிருக்க அந்த வேதங்களையே திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்றால் எப்படியிருக்கும்!

மது, கைடபர் என்ற இரண்டு அரக்கர்கள் தாம் பிரம்மனை விடவும் பெரியவாக வரவேண்டுமென்ற மமதையால், உலகத் தூண்களாகிய வேதங்கள் நான்கையும் குதிரை உருவில் வந்து பிரம்மனிடமிருந்து கவர்ந்து சென்றனர்.

வேதங்களில்லாமல் சிருஷ்டி அர்த்தம் இழந்தது. உலகம் தவித்தது. செய்வதறியாது திகைத்தார் பிரம்மா.

நேராக மகாவிஷ்ணுவிடம் சென்று முறையிட்டார்.

அவருக்கு உதவ முன்வந்தார் நாராயணன். வேதங்களை மீட்கவும், உலகை காக்கவும் புறப்பட்டார் அசுரர்கள் எப்படி குதிரை உருவில் வந்தார்களோ, அவ்வாறே தாமும் குதிரை உருக்கொண்டு புறப்பட்டார்.

அவ்வடிவம் கண்ட வையகம் வியந்து பூரித்தது. குதிரை முகம், மனித உடல், ஆயிரம் கோடி சூரியர்களையும் மிஞ்சும் ஒளி. அந்த சூரிய, சந்திரர்களே கண்கள். கங்கையும், சரஸ்வதியும் அந்தக் கண்களின் இமைகள். சங்கு, சகரதாரியாக இந்த திவ்ய சொரூபத்துடனேயே வேதங்களை மகா விஷ்ணு மீட்டெடுக்கக் கிளம்பினார்.

அகம்பாவத்தின வடிவமான அசுரர்களிடமிருந்து வேதங்களை மீட்டுவந்து பிரம்மனிடம் ஒப்படைத்தார் ஹயக்ரீவர்.

மகா விஷ்ணுவின் அவதாரமாகிய ஹயக்ரீவரே சரஸ்வதி தேவியின் குரு என்கின்றன புராணங்கள். அவரது துதிகளைச் சொல்வதும், அவரைத்துதிப்பதும் கல்வி, கலை ஆகியவற்றில் சிறப்பான பேற்றினை அடைய உதவும் என்பதும் தத்துவமாகும்.

மேலே காணப்படுகின்ற மாணவர்களுக்கான மந்திரத்தின் பொருள் : ..

**''ஞானத்தின் இருப்பிடமும், ஆனந்தமயமானவரும், படிகம்போன்ற நிர்மலமான குணமுள்ளவரும், எல்லா கலைகளுக்கும், கல்விக்கும் ஆதாரமாக திகழ்பவருமான ஹயக்ரீவரை வணங்குகிறேன்''**

இதைச் சொல்லியவாறு வழிபடுங்கள் மாணவர்களே! நீங்கள் ஜெயிப்பது நிச்சயம் ..







ஆரோக்கிய வாழ்வு

தொடர் -- 05

# நலம் தரும் யோகா

## 08 . நவாசனம்

செய்யும் முறை :-

பிருஷ்டபாகம் நிலத்தில் இருக்க கால்களும், தலைப்பகுதியும் உயர்ந்து உடல் ஆங்கில எழுத்தின் 'வீ' வடிவத்தில் இருக்கவேண்டும். இந்நிலையில் மூச்சினை இழுத்தும், விட்டும் பயிற்சி செய்ய வேண்டும்.



**பயன்கள் :-**

நடு வயிற்றுப்பகுதி அழுத்தப்படுவதால், அங்குள்ள மச்சை கரைய ஆரம்பிக்கிறது. அதனால் வயிறு இறுக்கமடைந்து உறுதிபெறுகிறது.

இந்தப் பயிற்சியை தினமும் காலை, மாலை இருவேளையும் பத்து நிமிடம் செய்து வந்தால், வயிற்றுப்பகுதி சமநிலைக்கு வந்து விடுகிறது. நீரழிவு நோய்க்கு ஒரு சிறந்த ஆசனம் இது. ஜீரணக் கோளாறு உள்ளவர்களுக்கு மிகச்சிறந்த நிவாரணி. பெண்கள் மகப்பேற்றுக்குப்பின் இந்த ஆசனத்தை செய்துவந்தால், தொந்தி வைக்காது.



## 09 . விபரீத கரணி


செய்யும் முறை :-


மல்லாந்து படுத்து, கழுத்து மடியக்கூடியதாக கால்களை மேல் நோக்கி உயர்த்தவேண்டும். கைகள் இடுப்பினைத் தாங்கிவாறு பாரம்தாங்கி போன்று செயல்படவேண்டும். நாடி நெஞ்சினை அழுத்தவேண்டும். சுவாசத்தை சாதாணமாக இழுத்து விடவேண்டும். இந்த ஆசனத்தை சாதாரணமாக உடல்பாரம் உள்ளவர்கள் கட்டில்போன்ற உயரம் உள்ள மெத்தையின் உதவியுடன் செய்யலாம். விளக்கம் குறைவாக இருந்தால், யோக ஆசிரியர்களிடம் கேட்டு, அல்லது யோக நூல்களில் படித்து புரிந்துகொள்ளவும்.

**பயன்கள் :-**

உடல் தலைகீழாக இருப்பதனால் காலில் உள்ள இரத்தம் தலையை நோக்கி வந்து சுவாசப் பையினால் சுத்திகரிக்கப்படுகிறது. வளைக்கப்பட்ட கழுத்துப் பகுதியில் மடிந்துள்ள இடத்தில் இரத்தம் தடைப்பட்டு கழுத்தில் தைய்ரோட் கணையத்தினை சுற்றிவர, அந்த இடத்தில் நல்ல, புது இரத்தம் மாற்றப்பட்டு உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. தினமும் பத்து நிமிடம் இதைச் செய்துவர, அதிக உடல் பருமனால் துன்பப்படுவோர் அளவான நிலைக்கு வருவார்கள். இதுவரையிருந்த நிலைக்கு எதிரான நிலை வருவதனால் விபரீத கரணி எனப் பெயர்பெற்றது. சுவாசமும் சாதாரண நிலையில் இருக்கும்.

இன்னொன்று, இந்த ஆசனத்தை செய்தால் மாற்று ஆசனம் கண்டிப்பாய் செய்யவேண்டும்.





## 10 . சர்வாங்காசனம்

செய்யும் முறை :-


சர்வாங்காசனம் செய்வதற்கு முதலில் விபரீதகரணி ஆசனம் செய்ய என்ன வழி முறையை கைக்கொண்டோமோ, அதே முறைகளைப் பயன்படுத்தி, உடலை செங்குத்தாக நிறுத்திச் செய்யவேண்டும். சுவாசம் சாதாரணமாக இருக்கவேண்டும். நோய்கள் இல்லாதவர்கள் ஐந்து நிமிடங்கள் செய்தால் போதும். நோய்கள் இருப்பவர்கள் அந்தந்த நோய்களுக்கு வேண்டிய நேரப்படி செய்யலாம்.





**பயன்கள் :-**

முதலில் கூறப்பட்ட ஆசனத்திற்கு சொல்லப்பட்ட அத்தனை பயன்களும் நூறு வீதமாக இதில் கிடைக்கிறது. ஆசனங்களின் அரசன் சிரசாசனம் என்பார்கள். அதற்குண்டான பயன்களை விடவும் அதிகமான பயன்கள் இந்த சர்வாங்காசனத்தில் உண்டு. இதற்கான மாற்று ஆசனம் கண்டிப்பாக செய்யவேண்டும். எல்லா அவயங்களுக்கும் இயக்கம் தந்து, சகல நோய்களுக்கும் எதிரான சக்தியை தருவதால் இது சர்வாங்க ஆசனம் எனப் பெயர் பெற்றது.



**நன்றி : அஷ்டாங்க யோகி, நா. குலசிங்கம் அவர்கள்**
**( பயிற்சிகள் தொடர்ந்து வரும் )**

# சக்திமிக்க மங்கையர்..

## அனுசூயா!..



அத்திரி மகரிஷியின் மனைவி அனுசூயா. சிறந்த பதிவிரதை. கணவனைப் பூஜித்து வந்ததால் புராணத்தில் இவள் பெற்ற சிறப்புகளுக்கு அளவே இல்லை.

ஸ்ரீ ராமபிரான் வனவாசம் வந்தபோது இவர்களின் ஆசிரமத்திற்கு வந்து இருவரையும் வணங்கிச்சென்றிருக்கிறார். அந்தளவுக்கு கற்பரசியாக பெயர்பெற்றவள் அனுசூயா.


ஒருநாள் தனது தோழி ஒருத்தியை ஒரு முனிவர் சபித்துவிட்டதை அறிந்தாள் அனுசூயா. 'பெண்ணே, உனது கணவன் நாளை சூரியன் உதிக்கும்போது இறந்துபோகக்கடவது.' என்பதே அந்த சாபம்.

அதனால் அழுதுதவித்த தோழியின் கணவனைக் காப்பாற்ற முடிவு செய்தாள் அனுசூயா. 'கவலைப்படாதே, நாளை பொழுது விடிந்தால்தானே உன் கணவன் இறப்பான். நீ உன் கணவனை இழக்கமாட்டாய் ..' என்று உறுதியளித்தாள். மறு நிமிடம் சூரியனுக்குக் கட்டளையிட்டாள். '' ஏ ஆதவனே, நான் சொல்லும்வரை நீ இனிமேல் உதிக்கக் கூடாது ..'' என்றாள். அதுபோலவே மறுநாளில் இருந்து சூரியன் உதிக்காமல் இருந்தான். இதனால், ஜீவராசிகள் துன்பமுற்றன. நோய் நொடிகள் பரவின. எங்கும் பதட்டமாக இருந்தது. இதற்கு காரணம் முனிவரின் சாபமும், அனுசூயாவின் சக்தியும் என்று தேவர்கள் அறிந்தார்கள். உடனே முனிவரை நோக்கி ஓடினார்கள். சாபத்தை விலக்கிக்கொள்ளும்படி வேண்டினார்கள். அனுசூயாவின் பெருமையை உணர்ந்த முனிவரும் சாபத்தை மீட்கவே, சூரியன் மீண்டும் உதயமானான், உலகம் மகிழ்ந்தது.

# மாணவர்கள் தருகின்ற பக்தித் தகவல்கள்! ..

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா ஆவணி மாதத்தில் பிறந்தார் என்றுதான் அன்றுமுதல் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்பட்டு வருகிறது. ஓண நட்சத்திரத்திலேயே கிருஷ்ணர் பிறந்தார் என்பது ஒரு சாராருடைய நம்பிக்கை. அதனால்தான் ஓணத்திற்கும் சிறப்பு வந்தது என்பதும் ஐதீகம்.

இன்னொரு நம்பிக்கையும் உண்டு. கோகுலாஷ்டமிதான் கண்ணன் பிறந்த தினம் என்பதுதான் அது. கிருஷ்ண பகவான் மதுரையிலே அஷ்டமியில் தோன்றி, உடனேயே கோகுலத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதால், அங்கே பிறந்தவன் போன்றே வளர்ந்தான். அந்த நாள்தான் கோகுலாஷ்டமி எனப்படுகிறது.



நன்றி :
செல்வி. பிரபாகரன் வேதிகா,
வ /கனகராயன்குளம் ம.வி.

அதைக் கொண்டாட வேண்டிய நாள் ஆவணி மாதக் கிருஷ்ணபட்ச அஷ்டமியாகும். அன்று ரோஹிணி நட்சத்திரமும் அநேகமாக இருக்கும். கண்ணன் நள்ளிரவில் தோன்றியதால், ஆவணி மாதத்தில் ரிஷப லக்கணத்தில் அஷ்டமி திதி இருக்கும் நாள்தான் கண்ணன் பிறந்த நாளைக் கொண்டாட ஏற்றது.

ஜயந்தி என்பது நட்சத்திரத்தை முக்கியமாகக் கொண்டது. பிறந்தநாள் கொண்டாட திதியை விட நட்சத்திரமே சிறந்தது என்பதும் சிலரது கணிப்பு. ஆனால் இரவில் அஷ்டமி திதி இல்லாதிருப்பினும் ரோஹிணி நட்சத்திரம் இருந்தால் போதும் என்று ஜயந்தி கொண்டாடுபவர்கள் கூறுவார்கள். ஜயந்தி என்ற சொல்லுக்கு ஜயத்தையும், புண்ணியத்தையும் தரவல்லது என்று பொருள் ..

# பாண்டிருப்பு திரௌபதை அம்மன் கோவில்
## கல்முனை



# உள்ளூர் புண்ணிய தலங்கள்.

பழமையும், பிரசித்தியும் வாய்ந்த அம்மன் ஆலயம் இது. கண்டி மன்னனாக இருந்த விமல தரும சூரியன் காலத்தில் (கி.பி. 1594 -- 1604 ) இக் கோயில் நிறுவப்பட்டதாக அறிய முடிகிறது. பதினெட்டு நாட்கள் இங்கே வருடாந்த உற்சவம் நடைபெற்று, இறுதி நாளில் தீ மிதிப்பும் இடம்பெறுகிறது.

'தீப்பள்ளயம்' ( தீப்பள்ளம் ) எனக்கூறப்படும் இதனை பெரும் தீ வேள்வியாக கருதுகிறார்கள்.

தீப்பள்ளயச் சடங்கு காலங்களில் மகா பாரதம், பாண்டவ வனவாசம் முதலியவற்றைக் கூறும் பாடல்கள் இங்கே படிக்கப்படுகின்றன. சடங்கின் இறுதி நாளில் தீ பாயும் வைபவம் முக்கியமானதாக இருக்கும். அத்துடன் பாண்டவர்கள் வனவாசம் போகும் காட்சி, தவநிலை ஏறும் காட்சி முதலியனவும் சிறப்பம்சங்களாக அமையும்.

மட்டக்களப்பு மான்மியத்திலும் இந்த ஆலயத்தின் சிறப்பு விரிவாக கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# திருவானைக்கூடம் -- ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
## மன்னார்.



சித்தி விநாயகர் எனும் திருநாமம் கொண்டு மன்னார் நகரில் பன்னெடுங்காலமாக வீற்றிருப்பவர் இந்த கணபதி.

அமைதி தவழும் சுற்றுச் சூழலில், சைவ மக்கள் பெருவாரியாக வாழ்கின்ற பகுதியில் இவரின் தலம் அமைந்திருக்கிறது. தினமும் மூன்று காலப் பூசை, ஊஞ்சற் பாடல்கள் உண்டு. தை மாதத்தில் 12 நாட்கள் அலங்காரத்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. சிவன், அம்பாள், நவக்கிரகம், வைரவர், ஸ்ரீகிருஷ்ணன், தேவியர்சமேத முருகன், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவார மூர்த்திகளாக தலம் நிறைந்து அருள் சொரிகின்றனர்.

மகிழ விருட்ஷமும், வசந்தமண்டப விமானமும் ஆலயத்திற்குத் தனியான எழிலைத் தருகிறது. பழங்கால பெருங்கோயிலின் நுழைவாயிலை நினைவூட்டுவதுபோல, வாயிலில் காணப்படும் துவாரபாலகர்களின் தோற்றம் தத்ரூபமானது.

பிள்ளையார் கதை, திருவெம்பாவை, ஸ்ரீ ஐயப்ப பஜனைகள், கிரகதோஷ நிவாரண வழிபாடுகள் என்பன சிறப்பாக இடம்பெறும் இவ்வாலயம், பெரும் கல்வி வளாகம் ஒன்றினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

உள்ளூர் புண்ணிய தலங்கள் ..

## வில்லூன்றி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்


**யாழ்ப்பாணம்.**


பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட பிள்ளையார் இங்கே கோயில் கொண்டருள்கிறார். நூறு வருடப் பழமை வாய்ந்த கல்வெட்டுகள், சாசனங்கள், திருவூஞ்சற் பாடல்கள் இங்கே உள்ளன.

மூலமூர்த்தியாக வீரகத்தி விநாயகர் தரிசனம் தருகிறார். தினமும் ஆறுகாலப் பூஜைகள் இடம்பெற்று வருகின்றன. வைகாசி அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு மகோற்சவம் நடத்துகிறார்கள். பத்து தினங்களுக்கு நடைபெறும் இந்த மகோற்சவத்தில் ஏராளமான அடியார்கள் பக்தி சிரத்தையோடு கலந்துகொள்கிறார்கள்.

இராமபிரான் தனது வில்லை ஊன்றி ஏற்படுத்திய நன்னீர் ஊற்றினை உடையதால் இப்பகுதி வில்லூன்றி எனப் பெயர்பெற்றது. அவர் சிவபூசை செய்த இடமாகையால், பூர்வ தனுஷ்கோடி என்றும் கருதப்படுகின்றது.

அது மட்டுமல்ல, முற்காலத்திலே சிவாலயம் ஒன்றும் இருந்ததாகவும் ஐதீகம் பகர்கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்புகளையும் கொண்டுவிளங்கும் பெருமைபெற்ற ஆலயம் இது.





## தான்தோன்றீஸ்வரர் கோயில்

**ஒட்டுசுட்டான்**

தான்தோன்றீஸ்வரராக எழுந்தருளி எம்பெருமான் இலங்கையில் கோயில் கொண்ட ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

மூலஸ்தானத்தில் சுயம்பு லிங்க வடிவமாக, ஆவுடையார் இன்றி பெருமான் அருள்புரிகிறார். பெரும் சரித்திரத்தோடு பின்னியிருக்கிறது இவ்வாலயத்தின் வரலாறு. கானகச் சூழல் கொண்ட இதன் ஆரம்பமும், வன்னி மன்னர்களால் போற்றி வளர்க்கப்பட்ட வழிபாட்டு முறைகளும் பக்தியூட்டுபவையாக உள்ளன.

அம்பாளின் நாமம் தேவி பூலோக நாயகி. போர்க்காலத்தில் நித்திய, வருடாந்த பூஜைகள் பாதிக்கப்பட்டதும் உண்டு. ஆயினும் கிரமமான நித்திய பூஜைகள் மூன்று காலங்களிலும் இடம்பெறுவது இத்தலத்தின் நியதி.

மகோற்சவம் ஆனி அமாவாசையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பௌர்ணமியில் தீர்த்தத்துடன் முடிவடைகிறது. பதின்மூன்றாம் திருவிழாவில் பக்தர்கள் வேடுவ வேடம் பூண்டு, வீதிவலம் வந்து, தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதும் இங்குள்ள பாரம்பரியம்.

# ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் திருகோணமலை


நகரின் வித்தியாலய வீதியில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் மூல தெய்வம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்.

முதலாம் ராஜேந்திர சோழ மன்னன் மெய்கீர்த்தியின் கல்வெட்டுத்தூண் இங்கே உள்ளதால், இதன் தொன்மை மிகப் பழமையானது என்று கூறலாம்.

விநாயகர், சுப்பிரமணியர், நாகதம்பிரான், சந்தான கோபாலர், வைரவர் ஆகிய பரிவாரமூர்த்திகளும் இங்கே தலங்கொண்டு அருள்புரிகின்றனர். நித்திய பூஜைகள் அந்தந்த நேரத்தில் பக்தி பூர்வமாக நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தை இறுதியாக கொண்டு முதல் பத்து தினங்களுக்கு மகோற்சவம் நடத்தப்படுகின்றது.

சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்ற மகோற்சவத் திருவிழாவில், தேர்த்திருவிழாவானது அதி சிறப்பானதாக இருக்கும். அவ்வேளையில் பிள்ளையார், காளி, சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகள் தனித்தனியாக சித்திரத் தேரில் வீதிவலம் வருவர். தை மாதத்தில் லட்ஷார்ச்சனையும், நவராத்திரியில் கொலு பூஜையும் இடம்பெற்று வருவது மிகச் சிறப்பானதாக இருக்கும் .

கேதார கௌரி விரதம் இங்கே அனுஷ்டிக்கப்படும் முறை சிறப்பம்சம் பொருந்தியதாக இருக்கும். வைகாசிப் பூரணையை அடுத்துவரும் திங்களில் வருடாந்தம் பொங்கல் நடைபெறுகிறது. பழமையான சிங்க வாகனமும், புராதன காளி விக்கிரகமும் இங்கே வரும் அடியவர்களை சிலிர்க்க வைக்கும்.





# தில்லைமண்டூர் முருகன் கோயில் மண்டூர்

மட்டக்களப்பிலிருந்து சுமார் இருபது மைல் தூரத்தில் இருக்கிறது இந்தக் கோயில். தில்லைமரங்கள் அடர்ந்த காடாக இருந்தமையினாலும், மூலஸ்தானத்தை மருவி தில்லை மரம் இருப்பதினாலும் இவ்வாலயத்தின் பெயரை தில்லை மண்டூர் என்று அழைத்தனர்.

இவ்வாலயத்தின் பின்னணி பக்திச் சுவைகூட்டுவதாகும். சூரபன்மனைச் சங்காரம் செய்த வேலாயுதத்திலிருந்து பிறந்த மூன்று ஒளிப்பிழம்புகளில் ஒன்று உகந்த மலையிலும், இன்னொன்று திருக்கோவில் வெள்ளை நாவலொன்றிலும், மூன்றாவது மண்டூர் தில்லை மரத்திலுமாக தங்கி நிலைகொண்டதாக ஐதிகம்.

கதிர்காமத்தில் நடைபெறுவதுபோன்ற வழிபாட்டுடன் ஒத்ததாக இங்கு பூஜை நடைபெற்று வருகிறது. மூலஸ்தானம் கதிர்காமத்தைப் போலவே திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். தென்திசையை வாயிலாக கொண்டிருப்பது இக்கோவிலின் தனித்துவம்.

வம்மி, ஆல், அரசு, கோங்கு போன்ற மரங்கள் நிறைந்த திருவீதியுடையது. முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி ஆகிய நானிலச சிறப்பினையும் பெற்றது.

கதிர்காமத் தீர்த்தோற்சவத்தின் பத்தாம் நாள் இங்கு கொடியேற்ற உற்சவம் நடந்து, இருபது தினங்கள் விழா நடைபெற்று, ஆவணிப் பௌர்ணமியில் தீர்த்தம் இடம்பெறும். விரத காலங்களில் திருச்செந்தூர், மகிமை, வள்ளியம்மை திருமணம், திருநீற்று மகிமை, படை வீடுகளின் சிறப்பு போன்ற புராணங்களும், பாடல்களும் படிக்கப்பட்டு வருகின்றன.

கார்த்திகைத் திருவிழா மிக விஷேசமாக நடைபெற்று வருகிறது. 'சந்தி மறித்தல்' என்னும் வகையில் சங்குகளை ஊதியவாறு வீதிவலம் வருதலும், வேடர் பூசையும் திருவிழாக் காலங்களில் இங்கே வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

**தெய்வீகத் தகவல் அறிவோம்! ..**

# அரசமரமும், அமாசோமவாரமும்



**அரசமரம்** விநாயகப்பெருமானுக்குரிய ஐந்து மரங்களுள் ஒன்று. இது விநாயகரின் ஆகாய சொரூபம் என போற்றப்படுகிறது.

பல வகையான ஞானச் சிறப்புகளுக்கு பேர்போன இந்த அரச மரத்தை அமாசோமவாரத்தன்று வலம் வந்தால் அதுபோன்ற பேறு எதுவுமில்லை என்று கூறுகின்றன சாஸ்திரங்கள்!

அமா சோமவாரம் என்பதும் மிக உத்தமமான நாட்களில் சிறந்த ஒரு நாள். அமாவாசையுடன் வருகின்ற திங்கட்கிழமையை 'அமாசோமவாரம்' என்பார்கள். இந்த நாளில் விரதம் மேற்கொண்டால், மூன்று கோடி சிவராத்திரிகள் விரதம் இருந்த பலன் கிட்டும் என்று ஞான நூல்கள் சொல்கின்றன.

நிறைவேறவேண்டிய எக்காரியத்தையும் இவ்விரதத்தை மேற்கொண்டு நிறைவேற்றமுடியும். அப்படியொரு சக்தி இந்த அமாசோமவாரத்திற்கு உண்டு என்றால், அதன் முழுப்பயனையும் தரவல்லதாக அமைவதே இந்த அரசமர வலம்.

கீதையில் பகவான் கிருஸ்ணன், மரங்களிலே நான் அரச மரமாய் இருக்கிறேன் என்று அருளியிருக்கிறார்.

அரசமரமும், வேம்பும் உயிரியல் மின்சக்தி கொண்ட மரங்களாகும். நாள் ஒன்றுக்கு 1800 கிலோ கரியமில வாயுவை தன்னுள் இழுத்துக்கொண்டு, அதற்குச் சமமான பிராண வாயுவை வெளிப்படுத்தும் தன்மை கொண்டது அரசமரம் என்று அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அரசமரத்தை வலம் வந்தால், உடலில் நோய் எதிர்ப்பு சக்திகள் அதிகரிக்கும். குழந்தைச் செல்வம் இல்லாத தம்பதியர், சூரிய உதயத்திற்கு முன், அரசமரத்தினை நூற்றியெட்டு சுற்றுக்கள் தம்பதிகளாக சுற்றி வந்தால் சந்தான பாக்கியம் கிட்டும்.

அரசமரத்தை சுற்றும்போது, மரத்தை மிகவும் நெருங்கிச் சுற்றாமல் சற்று தள்ளியே வலம் வரவேண்டும். அதிகாலையில் வலம் வரும்போது, அதன் இலைகளிலிருந்து வெளிப்படும் பிராணவாயுவை சுவாசிப்பதால் மனஒருமை கிட்டுவதுடன், உடல்நலமும் வலுப்பெறும். நிறைந்த ஆயுள் கிடைக்கும். நல்ல குழந்தைகள் பிறக்கும். வலம் வந்தோர் வாழ்வாங்கு வாழ்வார்கள் ..

**திங்கட்கிழமையும், அமாவாசையும் சேர்ந்து வருவது "அமாசோமவாரம்" ஆகும் ..**

# துவஜஸ்தம்பம்



**ஆலயங்களில் கொடியேறுவது, 'துவஜாரோஹணம்' என்றும், கொடியிறக்க நிகழ்வு, 'துவஜ அவரோஹணம்' என்றும் பெயர் பெறும் ..**

**துவஜஸ்தம்பம்** எனப்படும் கொடி மரம் காட்டும் அர்த்தங்கள் அற்புதமானது!

அசுரர்களை அகற்றவும், சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும், ஆலயத்தை காக்கவும், பக்தர்களை பாதுகாக்கவும் துவஜஸ்தம்பம் எனப்படும் கொடிமரம் ஆலயங்களிலே நிறுவப்படுகிறது.

சிவன் கோயிலின் கொடிமரத்தின் மேல் பாகத்தில் நந்தியை அமைப்பர். அதுபோல் விஷ்ணு கோயிலில் கருடனையும், தேவி ஆலயங்களில் சிங்கத்தையும், விநாயகர் ஆலயங்களில் மூஷிகத்தையும், முருகன் கோயிலில் மயிலையும் அமைப்பார்கள்.

கொடிக் கம்பத்தின் ஐந்தில் ஒரு பாகம் பூமியில் இருக்கும்படி நடுவர். இதன் அடியிலிருந்து உச்சிவரை ஏழு பாகமாக்கி, சதுர, கோண, வருத்த வடிவங்களில் அமைப்பர்.

சதுர பாகம் பிரம்ம பாகமாகும். அதன் மேல் விஷ்ணு பாகம் எண்கோண வடிவத்திலிருக்கும். அதன் மேலுள்ளது ருத்ர பாகம்.

கொடி மரத்தின் பீடம் பத்ர பீடம் எனப்படும். இறைவனிடம் பாசக்கட்டை அறுமாறு பலியிடவேண்டும் என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை நினைவூட்டும் வகையில், கொடிமரத்தில் கயிறு சுற்றியிருக்கும்.

மூலவருக்குச் செய்யும் அபிஷேகம், அலங்காரம் முதலியவை கொடிமரத்திற்கும் செய்ய வேண்டும்.

சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழ் முதலிய மரங்கள் கொடிமரம் செய்வதற்கு ஏற்றவையாகும்







நவராத்திரியின் பத்தாவது நாளாகிய விஜயதசமியில் அதிகளவில் அடியார்கள் சேர்ந்து சமஷ்டி பூஜையாகச் செய்தால் மிக நன்று. ஏனெனில், விஜயதசமி என்பது மோட்சத்தை அடையவும் கொண்டாடும் ஒரு தினம். அதுமட்டுமில்லாமல் கூட்டுப் பிரார்த்தனையின் சக்தியே தனி அல்லவா!

நவராத்திரியின்போது அனுட்டானங்களோடு காலையில் பூஜையை செய்யவேண்டும். தேவி மஹாத்மியத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு அத்தியாயம், அல்லது ஒரு குறிப்பிட்ட வழிமுறையில் பாராயணம் செய்யவேண்டும்.

முதல் மூன்று நாட்கள் துர்க்காஷ்டகமும், இரண்டாவது மூன்று நாட்கள் இலட்சுமி அஷ்டோத்திரமும், மூன்றாவது மூன்று நாட்கள் சரஸ்வதி அஷ்டோத்திரமும் உச்சரித்து தேவியரை பூஜிக்க வேண்டும். பூஜையில் பயன்படுத்தும் பூக்கள் வாடாமலும், அழுக்கில்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பூஜையில் வைக்கும் வெற்றிலை வாட-ாத, கோணலற்றவையாக இருக்கவேண்டும். பாக்கும் அப்படித்தான் நல்லதாக இருக்கவேண்டும். ஏனெனில் நம் உலகையும், நம்மையும் காக்கின்ற அன்னையர்க்கு சிறப்பானவற்றையே படைப்பதல்லவா நம் கடமை?

பூஜைகளில் காட்டவேண்டிய சிறப்புகள் நமது வசதிகளைப் பொறுத்தது. எளிமையோ, ஆடம்பரமோ-- உள்ளன்போடு நாம் தருகின்ற பூஜையை தேவியர் அகமகிழ்ந்தே ஏற்றுக்கொள்கிறார்கள்.

பூஜை முடிந்ததும் ஒரு தம்பதிக்கு உணவு பரிமாறலாம். அல்லது, ஏதாவது ஒரு நவராத்திரி தினத்தில் ஒருமுறையேனும் விருந்து தரலாம். இதுவும் சாத்தியமில்லாவிட்டால், ஒரு சுமங்கலிக்கேனும் ஒருநாள் விருந்து கொடுப்பது சிறந்தது என்று வலியுறுத்தப்படுகிறது. இதைப்போல் ருது அடையாத கன்னிப்பெண்களையும் உணவளித்து, உபசரித்து, தாம்பூலம் கொடுத்தனுப்புதல் புண்ணியமாகும்.

இப்பூஜையில் சொல்லப்படுகின்ற பெருஞ்சிறப்பு என்னவெனில், எவ்வித வசதியுமற்றவர்கள் அம்பாளுக்குரிய நவராத்திரி பூஜையை அளிக்கமுடியவில்லையே என்று வருந்தவேண்டியதில்லை. அவர்கள் அந்த இரவுகளில் பூஜிக்க, ஒரு குத்து விளக்கே போதும். குத்துவிளக்கை தேவியாக பிரதிமை செய்து, பூவும் நீரும் வார்த்து, தீபம் காட்டினாலே போதும். இருக்கின்ற நிவேதனத்தை தூய்மையோடு படைக்கலாம். யாராவது ஒருவருக்கு தாம்பூலமும் கொடுத்துவிட்டால், பூரண நவராத்திரி அனுட்டானத்தின் முழுப்பயனுமே கிடைத்துவிடும்.

மூலநட்சத்திரத்தன்றே சரஸ்வதியை ஆவாஹனம் செய்துவிட வேண்டியது மிக முக்கியம். விக்கிரஹ வடிவத்திலோ, புத்தகத்தின் வடிவத்திலோ சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்யலாம். பூஜிப்பதும், வழிபடுவதும் ஆத்மார்த்தமாக இருக்கவேண்டும். மனம் ஒன்றி பிரார்த்தனை புரியவேண்டும். உலகன்னையாகிய அம்மைக்கு இவ்வகையில் நாம் செலுத்தும் சிறு நன்றிதான் இது. ஏனெனில், எல்லாவற்றையும் நமக்கு கொடுப்பதே அவள்தானே!

# மங்கையர் உள்ளம் மங்காத செல்வம் ..

# மாநிலங்களும், மங்கையரும்

மங்கையர்களுக்கென்றே நம் சமயம் படைத்து வைத்திருக்கின்ற வெகுமதிகளுக்கு எல்லையே கிடையாது.

இந்து சமயத்தின் வேரடியில் வாழ்கின்ற மங்கைக்கு அந்த வேதத்தில் உள்ள சிறு துளியே போதும். அதன் வழிசென்று இந்த வையகம் கொள்ளாத சிறப்புகள் யாவற்றையுமே வென்றெடுத்து விடுகிறாள்!

மொழிகள் மாறினும், தேசங்கள் மாறினும், வாழ்வியல் வேறுபடினும் இந்து என்ற பெருங்குடையின் கீழ் பத்திரமாக தன் பதிவிரதா தர்மத்தை நடத்தி புகழ் பெற்று விடுவது நம் மங்கையர்க்கே உரித்தான இலக்கணம்!

பிறந்தது முதல் முதுமைவரைகூட அவர்களுக்கு நம் சமயத்தில் இருக்கின்ற பாதுகாப்பு நூறுபேருக்குச் சமமானது. கிடைக்கின்ற அனுகூலங்களோ அளவற்றது!

சுமங்கலிகளின் வாழ்வும், மங்கலம் பொங்கும் அவர்களின் மனையறமும் வர்ணிக்க முடியாத சுவடிப் பொக்கிஷங்களாகவும், தேச வழமைகளாகவும், உலகம் முழுதும் பரவிக் கிடக்கின்றன ..

நம் நாட்டு இந்துப் பெண்மக்களின் விரதங்களும், குடும்ப மேன்மையை அடிப்படையாகக் கொண்ட சமயாசாரங்களும் தொன்மை வாய்ந்தவை. இன்னும் அதிக ஆழத்தோடு ஐதீக நம்பிக்கையில் ஊறிய பெண் குலத்தோர் நம் அருகே இந்திய மாநிலங்களில் நிறைந்துள்ளனர்.

சிறிதான வித்தியாசங்களோடு அங்கே கடைப்பிடிக்கின்ற அனுட்டானங்களை அறியும்போது, அனைத்துக்கும் வேராக இருப்பது இந்து தத்துவமே என்பதை அறிவது கடினமல்ல.





நம் இந்து மங்கையரின் அதிக பட்சமான எதிர்பார்ப்பே நிறைவான இல்லற வாழ்க்கைதான். அதிலும் சதிபதி ஒற்றுமை சீராக இருந்துவிட்டால் போதும். அதற்கு மேல் சொர்க்கம்கூட அவர்களுக்கு கையளவுதான்!

எந்த நானிலங்களிலும் மாறாத இந்த உணர்வு, சகல சுமங்கலிகளையும் தமது மாங்கல்ய பலத்தில் கவனத்தோடு இருக்க வைக்கிறது ..

## உலகம் முழுதும் கௌரி விரதம்! ..

திருமணமான பெண்கள் தங்களின் மாங்கல்யம் நிலைத்து, நீடிப்பதற்காகவும் கன்னிப் பெண்கள் அழகும், ஆற்றலும் மிக்க இளைஞன் தனக்கு கணவனாக வரவேண்டுமென்றும் பார்வதி தேவியை வேண்டி பூஜைகள் செய்வது வழக்கம். இது சைத்ர (சித்திரை) மாதத்தில் வரும். நமது 'சௌபாக்கிய கௌரி விரதம்'கூட இப்படியான ஒன்றுதான்.

இந்த அரிய விரதமும், பூஜையும் உலகம் தழுவி வாழ்கின்ற அனைத்து இந்து மங்கையரும் அனுஷ்டிக்கும் வழக்கமும், அதில் காணப்படும் பிரதேச வழமைகளும் வியக்க வைக்கின்றன ..

## ராஜஸ்தானில் கௌரி விழா!! ..

அங்கே இந்த வழிபாட்டை 'கண்கோர்' பூஜை என்கிறார்கள். ஹோலிப்பண்டிகை முடிந்ததும், கண்கோர் பூஜைக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பாக ஆரம்பித்துவிடுகின்றன. இங்கே நமது பூஜைகள் வீட்டிலும், கோயிலிலும் சந்தடியில்லாமல் நடந்துவிடுகின்றன. ஆனால், அங்கேயோ இது ஒரு தேசிய விழா அளவுக்கு பிரதேசங்கள் கொண்டாடும் ..

## பிறந்த வீடு வரும் பார்வதி தேவி ..

ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளில் கரை மணலை எடுத்து வந்து, பிசைந்து கௌரி (பார்வதி) தேவியின் உருவங்களை செய்வார்கள். பூஜைக்கான மலர்களை சேகரிக்க அங்கே உள்ள பெண்கள் செல்லும் காட்சியே வியப்பாக இருக்கும். ஆமாம், அந்த வேளையில் இவர்கள் பலவண்ண ஆடைகள் அணிந்து பூக்களை பறிக்கவேண்டும் என்பதும் நியதி. அவ்வேளையில் கையில் பித்தளைச் செம்புகளோடு அவர்கள் பாடிக்கொண்டே செல்லும் காட்சி பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.



## பல்லக்கிலும், யாணையிலும் பார்வதி தேவி ..

கண்கோர் அன்று விரதமிருந்து, பார்வதியை வேண்டி பூஜித்துக்கொள்வர். மாலையில் நல்லநேரத்தில் தேவியின் பிரதிமைகளை அவரவர் சக்திக்கேற்ப வண்டிகளிலும், பல்லக்கிலும், குதிரை மீதும், யாணைகளின் அம்பாரிகள் மீதும் ஊர்வலமாக கொண்டு செல்வர். அப்படி எடுத்துச்சென்று ஏரியில் ஜலாரோகணம் செய்வர்.

கண்கோர் பூஜைக்கு சில தினங்களுக்கு முன்பாகவே மண் கலயங்களில் கேழ்வரகை (பாலிகை) தெளித்து வைப்பார்கள். பூஜையன்று இவை சாண் உயரத்திற்கும் மேலாக செழித்து வளர்ந்திருக்கும். பார்வைக்கு பசுமையாக காட்சி தரும்.

மணமுடித்து கணவன் வீட்டுக்குச் சென்ற பார்வதிதேவி அன்று பிறந்த வீட்டுக்கு வருவதாகவும், அன்று வீட்டிலும், நாட்டிலும் பசுமை பொங்கிப் பூரிப்பதாகவும் இது அர்த்தம் கொள்ளப்படுகிறது.

## அம்மனுக்கு சீதனம் தரும் ஏழை மங்கையர்! ..

பார்வதி தேவிக்கு சீதனமாக இனிப்பு வகைகளையும் புடவை, சட்டைத்துணி, பாவாடை, பாத்திரங்கள் என்று பல பொருட்களையும் மக்கள் அனுப்பி வைக்கிறார்கள். ஊர்வலம் முடிந்ததும் இவை ஏழைகளுக்கு விநியோகிப்படுகின்றன.

## இங்கே அனுட்டிப்பதே தெரியாது அங்கேயோ, கோலாகலம்!

இந்தப் பூஜையின் மிகச் சிறப்பான அம்சமே ஊர்வலம்தான். அன்று அங்கே பகல் நேரத்திற்குப் பின் விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. அலுவலகங்கள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் யாவுமே ஒட்டுமொத்தமாக மூடப்பட்டிருக்கும். அந்த அளவுக்கு ஊர்வலத்தில் பங்கு கொள்ள மக்கள் ஆர்வத்தோடு காத்திருப்பார்கள். ஒவ்வொரு வீட்டிலிருந்தும் புறப்படுகின்ற பார்வதியின் பிரதிமை ஊர்வலம் நகரின் பிரதான வீதியில் தொடங்கும். அது பெரிய ஊர்வலத்தில் வந்து சங்கமிக்கும்போது, பல நதிகள் புனல் பெருகி வந்து பெரிய ஆற்றோடு சங்கமிப்பதைப்போல இருக்கும். பெண்கள் வண்ண உடைகளில் 'கூமர்' என்னும் கும்மி அடித்துப் பாடிக்கொண்டே செல்ல, ஊர்வலமும் சிறிதுசிறிதாக நகரும்போது பார்ப்பதற்கு ஆனந்தமாக இருக்கும் ..

# கணபதி ஹோமம்!





எதிலும் முதல் பூஜை பெறுகின்ற விநாயகருக்கா இந்த கணபதி ஹோமம்! முதல் தரிசனம் இவருடைய இருந்துவிட்டால், அடுத்த தரிசனங்கள் தானாக அமைந்துவிடும். அந்தளவுக்கு தெய்வங்களிலேயே மேலாக பிள்ளையார் ..

முக்கண்ணனும் இவரை வழிபட்டுவிட்டுத் முப்புரத்தையும் வெற்றிகொண்டாரென்றால் விநா சிறப்புக்கு ஈடேது!

ஆதிசங்கரர் தனது 'சுப்ரமண்ய புஜங்க'த்தின முதலாவது சுலோகத்தில் 'மலைபோன்ற தடைகளையும் போக்கடித்துவிடுபவர் கணபதி' என்கிறார். முதல் பூஜையை மட்டும் பிள்ளையாருக்கு செய்தால் போதும், வேறேதும் அதற்குமேல் அவருக்கு வேண்டியதில்லை.

வேதங்களிலும், புராணங்களிலும் அவருக்கான வழிபாட்டு முறைகள் விரிவாக சொல்லப்பட்டிருக்கின்றன. விநாயக சதுர்த்தியன்று மஞ்சளும், மண்ணும் கலந்தே விநாயகரைச் செய்து வழிபடுவர்.

இவருக்கான வழிபாட்டு முறையில் 'கணபதி ஹோமம்' மிகவும் சிறந்தது. இதுவும் 'கணபதி உபநிஷத்தில்' விரிவாக கூறப்படுகிறது.

**'யோ மோதக ஸஹஸ்ரேண யஜதே, ஸவாஞ்சித பலமவாப் நோதி'** -- ஆயிரம் கொழுக்கட்டையால் ஹோமம் செய்தால் நினைத்ததை அடையலாம். நெல் பொரியால் ஹோமம் செய்தால் புகழ் வந்து சேரும். எளிதாய் கிடைக்கின்ற அருகம்புல்கூட ஐங்கரனை ஹோமத்தில் பெருமளவில் குளிர்விக்கும். இதனால் பெருந்துயர்களிலிருந்து விடுபடலாம்.

கணபதி ஹோமத்திற்குறிய திரவியங்கள் எட்டு.

அவையாவன : மோதகம் எனும் கொழுக்கட்டை, அவல், நெல்பொரி, சத்து மா, கரும்பு, கொப்பரைத் தேங்காய், சுத்தமான எள், வாழைப்பழம் என்பவையாகும். இவற்றைத் தவிர, அருகம்புல், நெய், விளாம்பழம், நாவல்பழம், மாதுளம்பழம் ஆகியவற்றையும் ஹோம நிவேதனமாக செய்யலாம்.

எட்டுப்பேரைக்கொண்டு ஹோமம் செய்தால் சூரியனுக்கு ஒப்பான ஒளியை ஒருவர் பெறுவார்.

சந்திரனில் நான்காம் பிறையை பார்க்கக்கூடாது. பழிகள் ஏற்பட வாய்ப்புண்டு. கிருஷ்ண பகவான் ஒருமுறை நான்காம் பிறையை பார்த்துவிட்டதால் 'ஸ்யமந்தகமணி'யை அபகரித்தார் என்ற பழி அவர்மேல் வந்தது. அதனைப் போக்குவதற்காக கிருஷ்ணபட்ஷ சதுர்த்தியில் உபவாசமிருந்து, மாலையில் விநாயகரைப் பூஜித்தே பழி நீங்கப்பெற்றார் என்று பாகவதம் கூறுகிறது.

பிரம்மாண்ட புராணம், லலிதோ பாக்யானம் என்னும் நூலில் தடை செய்கின்ற யந்திரத்தை, ஒருமுறை சக்தி தேவியின் சேனையின் நடுவில் அரக்கர்கள் போட்டு வைத்தார்களாம். இதனால் அம்மனின் படைகள் போராற்றல் மங்கி செயலற்று விட்டனர். உடனே, அம்பிகை முக்கண்ணனை நோக்கவே, விநாயகப் பெருமான் அங்கே சடுதியாக தோன்றினார். தடை யந்திரங்களை முறித்தெறிந்து அம்பாளின் சைனியத்திற்கு வெற்றி வாங்கிக் கொடுத்தார் என்று கூறுகிறது அந்த .புராணம்.

கணபதி ஹோமத்தை மிக சிறிய அளவிலும், பெரிய அளவிலும் செய்யலாம். அவரவர் சக்திக்கேற்றபடி செய்யப்படும்போது அன்போடு ஏற்றுக்கொண்டு அருள் தந்துவிடுகிறார் மஹாகணபதி.

'த்வை மாதுரர்' என்ற பெயரும் பிள்ளையாருக்கு உண்டு. உமையம்மனும், முக்கண்ணன் முடிமீதுள்ள கங்கையுமாக விநாயகருக்கு இரண்டு தாய்மார்கள் என்றும் புராணம் சொல்கிறது. கணபதி ஹோம முறை 'கணபதி உபநிஷத்'திலும், 'வாஞ்சா கல்பதா' என்ற பெரிய ஹோம முறையிலும் விரிவாக கூறப்பட்டுள்ளது.கணபதி ஹோமம் செய்யப்படுவதால், தடைகள் நீங்கி, மேன்மைகளை பெறலாம் ..

## அறியாமையிலும் புண்ணியமே!



**ஒரு கிராமத்தில் கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள்.** நற்குணங்கள் என்பதே அவளிடம் கிடையாது. மாறாக, அத்தனை தீய குணங்களும் இருந்தன. அதிலும் இரக்கம் என்பது மருந்துக்கு இல்லை.

ஒருநாள் அவள் உரலில் அரிசியை நிரப்பி தீட்டிக்கொண்டிருந்தாள். அப்போது ஒரு சிவனடியார் பாத்திரத்தை ஏந்திய நிலையில் தர்மம் கேட்டு வந்தார். அவ்வளவுதான்.. கிழவிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.


**''ஏய், இது என்ன சத்திரம் என்று நினைத்துவிட்டாயா போவோர் வருவோருக்கெல்லாம் தானம் செய்ய, .. போ, போ! ''** என்று கையிலிருந்த உலக்கையால் அவரை அடிப்பதற்கு ஓங்கினாள். அப்போது அந்த உலக்கையின் நுனியில் ஒட்டியிருந்த ஒரு அரிசி அவரின் பாத்திரத்தில் விழுந்தது.

மிரண்டுபோன சிவனடியார் ஒன்றும் பேசாது அவ்விடத்தைவிட்டு அகன்றார்

நாளடைவில் முதுமையால் பாதிக்கப்பட்டு அந்தக் கிழவி இறந்துபோனாள். எமலோகத்திற்கு அவளைக் கொண்டுசென்ற கால தூதர்கள், சித்திரகுப்தனின் முன்னால் நிறுத்தினார்கள். அவளின் பாவ, புண்ணியக் கணக்கை வாசித்தார் சித்திரகுப்தனார். ''எல்லாமே பாவம்தான் .. புண்ணியம் என்பதே செய்யவில்லை. நரக லோகமே இவளுக்கு ஏற்றது. ஆனால், ஒருநாள் ஒரு சிவனடியாரை உலக்கையால் அடிக்க முற்பட்டபோது இவளது ஒரு அரிசி அவரின் பாத்திரத்தில் விழுந்தது. இந்த ஒரு புண்ணியத்திற்காக திருக்கைலாயத்தில் சிவபெருமானை தரிசிக்கும் பாக்கியத்தை இவள் பெறுகிறாள்! ..'' என்றார். அறியாமல் விழுந்த ஒரு அரிசியே கைலாயநாதரை தரிசிக்கச் செய்ததென்றால், அறிந்து செய்யும் தர்மங்களின் பலன் எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்ப்போம் **நன்றி : திருமுருக கிருபானந்த வாரியார்**

---

***எந்த வகையான சாபத்தையும் போக்கவல்லவர் சோமநாதர்!***



பிதுர்சாபம், பட்சிசாபம், தேவசாபம், தாய், தந்தை, சகோதரன், உறவினன் என்று யாருடைய சாபமாக இருந்தாலும் சோமசாதரை வழிபட்டுவர விமோசனம் கிடைக்கும்.

ஜோதிர் லிங்க மூர்த்தியானவர் இவர். அமாவாசை முதல் நவமிவரை ஒன்பது ராத்திரி பால் பழம் மட்டுமே உணவாகக்கொண்டு, பிரமச்சரிய விரதம் பூண்டு இவரை, ***'ஓம் ஜெய ஜெய சோம் நாத், ஹர ஹர ஆசாம் ரட்சக, சிவசிவ சோமயீசா ..'*** என்று தினமும் காலை, மாலை, அர்த்தஜாம பொழுதுகளில் ***1008*** முறை ஓதி, சிவனுக்கு பாலாபிஷேகம் செய்துவர, எல்லா சாபத்தினின்றும் விமோசனம் பெறலாம். எல்லா தோஷங்களும் அறவே விலகிச் செல்லும் என்கிறது சாஸ்திரம். பேய், பிசாசு அண்டாது. குடும்பத்தில் துர் மரணங்கள் நேராது. இறந்தார்கள் முக்திபெற வழி ஏற்படும். கொடிய நோய்கள் வருவதற்கும் இடமில்லை.

சந்திர கிரஹண காலத்தில் நவக்கிரக நாயகர்களும், அஸ்வினி தேவர்களும், சப்த ரிஸியர்களும், பதினெட்டு சித்தர்களும் கூடி வரை ஆராதிப்பார்கள். அத்தகைய ஆன்மீக சக்தி வாய்ந்த இந்த சோம நாதர் தன்னை வழிபடுகின்ற பக்தர்களுக்கு எல்லா பாக்கியங்களையும் தருபவராவார் ..



# விநாயகரின் விளையாட்டு!

இராவணன் சிறந்த சிவபக்தன். ஒருமுறை கயிலயங்கிரியில் அவனுக்கு வரமளிக்கப்பட்ட ஆத்மலிங்கத்தை தனது இலங்கைக்கு கொண்டுவந்துகொண்டிருந்தான். மிகுந்த பயபக்தியோடு கைகளில் ஏந்தியவாறு சென்றபோது, வழமையான நித்திய கருமங்களுக்கான நேரம் வந்தது..

ஸ்நான கர்மானுஷ்டங்களை ஒருபோதும் தவற விடுவதில்லையாதலால் லிங்கத்தை என்ன செய்வது என யோசித்தான். ஆத்மலிங்கமோ தரையில் வைக்கத் தக்கதன்று. அப்போது அவ்வழியால் வந்துகொண்டிருந்த இளைஞனிடம், ''இந்த லிங்கத்தை சற்று கையில் வைத்திரு. ஒரு நாழிகையில் வந்து பெற்றுக்கொள்கிறேன் ..'' என்றான் இராவணன். இளைஞனும், ''ஒரு நாழிகையில் வரவேண்டும். தாமதமானால் தரையில் வைத்துவிட்டுச் சென்றுவிடுவேன்'' என்று சொல்லிவிட்டுப் பெற்றுக்கொண்டான்.


சிறிது நேரம் கழித்து இராவணன் வந்தபோது அந்த இளைஞன் லிங்கத்தை கீழே வைத்துவிட்டதை கண்டு சினந்தான். இளைஞனும், ''நான் என்ன செய்வது, நீங்கள் வர தாமதமாயிற்று. லிங்கத்தின் கனமும் என்னால் சுமக்க முடியவில்லை ..''

கோபத்தோடு அவனைத் திட்டிவிட்டு ஆத்மலிங்கத்தை தூக்க முயன்றான் இராவணன். ஆனால் என்ன அதிசயம்! அவனால் அதனை அசைக்கக்கூட முடியவில்லை. தனது பலம் முழுவதையும் திரட்டி இருபது கைகளாலும் தூக்க முயன்றும் முடியாமல் போனது.

இளைஞனை தண்டிப்பதற்காக கோபத்துடன் திரும்பியபோது அந்த இடத்தில் விநாயகர் சிரித்தவாறு நின்றார்.

'' இலங்கை வேந்தனே, இந்த இடமானது வருங்காலத்தில் லட்சக்கணக்கில் சிவனடியார்கள் தங்கப்போகும் கோகர்ணமாகும். ஆதலால் ஆத்ம லிங்கத்தை இங்கே நிலைநிறுத்த சம்மதிப்பாயாக..'' என்றார். இராவணனும் லிங்கத்தை விழுந்து வணங்கிவிட்டு இலங்கை திரும்பினான் ..

# தெய்வீக சந்தேகங்கள் ..



**பிள்ளையார் வழிபாட்டில் அருகம்புல் முக்கிய இடம் பிடிக்கிறதே! காரணம் என்ன? ..**

எமதர்மனுக்கு அனலாசுரன் என்று ஒரு மகன் இருந்தான். தேவர்களையும், முனிவர்களையும் கொடுமைப்படுத்துவதே இவனது வேலை. எல்லோரும் விநாயகரிடம் சென்று முறையிட்டனர். அவரும் அவனின் கொடுமைக்கு முடிவு கட்டும் வேலையில் இறங்கினார். சண்டையின முடிவில் தனது துதிக் கையால் அவனை இழுத்தெடுத்து தனது வாய்க்குள் போட்டு அவனின் கதையை முடித்துவிட்டார். உடனே அவரது உடம்பில் தாங்கொணா அளவு வெப்பம் தகித்தது. அந்த சூட்டில் உலகமும் கருக ஆரம்பிக்கவே, எண்பதாயிரம் முனிவர்கள் சேர்ந்து தலா இருபத்தோர் அறுகம்புல்லை சேர்த்துக் கட்டி, விநாயகரின் திருமேனியை நீவிக்கொடுத்தார்கள். வெப்பம் தணிந்தது. அன்றிலிருந்து பெருமானுக்கு அருகம்புல் என்றாலே பிரியம் வந்துவிட்டது. பக்தர்களும் சூட்சுமத்தை புரிந்துகொண்டு தவறாமல் பூஜைகளில் அருகம்புல்லை பயன்படுத்தி கணபதியை கைக்குள் போட்டு, காரியங்களையும் சாதித்து விடுகிறார்கள் ..

**முருகனின் அறுபடை வீடுகள் எவை, எதனால் அப்படி அழைக்கப்படுகின்றன?**




| | | |
|---|---|---|
| 1. திருப்பரங்குன்றம் | -- | இந்திரன் மகளாகிய தெய்வானையை முருகன் மணம்புரிந்த இடம் இது. |
| 2. திருச்செந்தூர் | -- | சூரபன்மனை போரில் அழித்த இடம் இது |
| 3. பழனி | -- | மாங்கனி கிடைக்காததால் கோபம்கொண்டு துறவு பூண்ட இடம் இது |
| 4. சுவாமி மலை | -- | தந்தையான சிவபெருமானுக்கு பிரணவ மந்திரம் உபதேசித்த இடம் இது. |
| 5. திருத்தணிகை | -- | வள்ளியை மணம்புரிந்த இடம் இது. |
| 6. பழமுதிர்ச்சோலை | -- | முருகன் ஏகாந்தமாக தேவியர்கள் சகிதம் ஓய்வெடுக்கும் இடம் இது. |



# தேவியர் சிறப்புகள்!



# நவராத்திரி பிரசாதம்!



## அபிராமி ..

அம்பிகையான அபிராமியையும், அவளின் பரம பக்தனான அபிராம பட்டரையும் அறியாதார் இருக்கமுடியுமா!

ஒரு நாள் சரபோஜி மன்னன் தேவி தரிசனம் செய்ய அமிர்தகடேஸ்வரர் கோயிலுக்கு வந்தான். காண்கின்ற மங்கையரெல்லாம் தான் வணங்கும் அபிராமியே என்று அவர்களை பூஜிக்கவிழைவதும், அவர்கள் மீது பூச்சொரிவதும் வழக்கமாகக் கொண்ட அபிராமி பட்டர் அந்நேரம் அங்கே தியானத்தில் அமர்ந்திருந்தார்.

தன்னை மறந்து, தனது மனக்கண்ணில் அம்பிகையின் அலங்கார சொருபத்தில் லயித்திருந்த பட்டருக்கு மன்னன் நெருங்கி வந்த சந்தடி தெரியவில்லை. சகலரும் மரியாதையோடு விலகி வழிவிட, ஒருவன் மட்டும் தன்னை ஏறெடுக்காமல் இருப்பது கண்டு வியந்தான் அரசன். வியப்பு அடுத்த கணம் கோபமாக மாற, அமர்ந்திருந்த அபிராமி பட்டரை நெருங்கினான்.

'என்ன பெரியவரே, நான் வந்தது தெரியவில்லையா! ..'' என்றான் அவரிடம்.

அம்பாளின் கவனத்தில் இருந்த பட்டரின் காதில் மன்னனின் குரல் மெலிதாய் விழவே, ''இல்லையே! எனக்கு தெரிவதெல்லாம் அம்மையின் பேரழகுதான் .. அதை எப்படிப் புகழ்வேன்! ..'' என்று கனவில் பிதற்றுவதுபோல பதில் சொன்னார். அப்போது அவரின் முகத்தில் தெரிந்த தெய்வீகத்தைக் கண்டு திகைத்தான் வேந்தன். இருப்பினும் அவர் நடிக்கிறாரோ என்றறிய விரும்பி மீண்டும் கேட்டான்

''ஓ, அப்படியானால் இன்றைய நாளும் தெரிந்திருக்குமே, இன்று அமாவாசை எத்தனை நாழிகைக்கு இருக்கிறது? '' என்று கேட்டான்.

இதற்கு பட்டர் சொன்ன பதில் தூக்கி வாரிப் போட்டது ..

'' அமாவாசையா? யார் சொன்னது! இன்று பௌர்ணமி ..'' என்றார்.

பூரண அமாவாசையாகிய தினத்தை பௌர்ணமி என்று பட்டர் கூறியதும், தன்னை மதிக்காமல்வேறு நடந்ததும் கண்டு சினமடைந்தான் சரபோஜி மன்னன்.

''இவன் சொன்னவாறே இன்று பௌர்ணமியாக இருந்தால், பூரண சந்திரன் வானிலே பிரகாசமாகத் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றத் தவறின், இவனை கழுவிலேற்றி கொன்று விடுக ..'' என்று படைவீரர்களுக்கு உத்தரவிட்டுச் சென்றான்.

அதன்படியே வீரர்கள் தன்னை சூழ்ந்தபோதுதான் சுயநினைவுக்கு வந்த அபிராமி பட்டர் நடந்ததை அறிந்தார். மன்னனை மதிக்கத் தவறியதற்கும், தவறான திதியை கூறியதற்கும் வேதனையுற்றார்.

இரவானதும் கழுவிலேற்றும் தருணமும வந்தது. தன்னைக் காக்குமாறு அம்பிகையை நோக்கி மனமுருகி வேண்டினார். அடுத்த கணமே அம்பாள் தோன்றி தனது காதணியை கழற்றி விண்ணிலே வீசியெறிந்தாள். அது பேரொளியை வீசிக்கொண்டு வானத்தில் பூரண சந்திரனாக உதித்தது.. இதைக்கண்டு மன்னனும், மக்களும் உட்பட உலகமே திகைத்துப்போனது.

நடந்தது இதுதான் ..

மன்னன் கேள்வி கேட்டபோது, அபிராம பட்டரின் மனக்கண்ணில் தோன்றிய காட்சியில் அம்பிகையின் ஆபரணங்கள் ஜொலித்துக்கொண்டிருந்தன. கண்களைக் கூசச்செய்த அந்த ஒளியை நிலவொலியாக கருதி மன்னனின் கேள்விக்கு இன்று பௌர்ணமி என்று பதில் சொல்லிவிட்டார் பட்டர்.

இக்கதையின் உட்பொருள், அமாவாசை இருள் போன்ற துயரம் நம்மைத் துன்புறுத்தினாலும், வருந்தி வேண்டினால் எந்த இருளையும் நீக்கி தம் பக்தர்களை அம்பிகை காப்பாள் என்பதே ..



# ஸ்ரீமத் பகவத் கீதை 05

## -- பாரதியார் உரை --

தொகுத்து, தொடராக தருபவர் :
வை. திருச்செல்வம்

இப்பொருள் அழிவற்றது, பிறப்பற்றது, என்றுமுளது. இங்ஙனமுணர்வான் கொல்வதெவனை? அவன் கொல்விப்பதெவனை? 21

நைந்த துணிகளை கழற்றியெறிந்துவிட்டு, மனிதன் புதிய துணிகளை கொள்ளுமாறுபோல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்துவிட்டு புதிய உடல்களை எய்துகிறான். 22

இவனை ஆயுதங்கள் வெட்டமாட்டா, தீ எரிக்காது, நீர் இவனை நனைக்காது, காற்று உலர்த்தாது. 23

பிளத்தற்கரியவன். எரித்தற்கும், நனைத்தற்கும், உலர்த்துவதற்கும் அரியவன். நித்தியன். எங்கும் நிறைந்தவன், உறுதியுடையான். அசையாதான். என்றும் இருப்பான். 24

**''தெளிதற் கரியான் சிந்தனைக் கரியான்**
**மாறுத லில்லாதா னென்ப!**
**ஆதலால் இவனை இங்ஙனம் அறிந்துநீ**
**துயர்ப் படா திருக்கக் கடவாய்.''** 25

அன்றி, நீ இவனை நித்தமும் பிறந்து நித்தமும் மடிவானென்று கருதினால், அப்போதும், பெருந்தோளுடையோய், நீ இவன் பொருட்டுத் துயருறல் தகாது. 26

பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனில், இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று. 27



பாரதா, உயிர்களின் ஆரம்பம் தெளிவில்லை, நடுநிலைமை தெளிவுடையது, இவற்றின் இறுதியுந் தெளிவில்லை. இதில் துயர்ப்படுவதென்னே? 28

இந்த ஆத்மாவை,

**''வியப்பென ஒருவன் காண்கிறான்,**
**வியப்பென ஒருவன் சொல்லுகிறான்,**
**வியப்பென ஒருவன் கேட்கிறான்,**
**கேட்கினும், இதனை அறிவான்**
**எவனுமிலன்.''** 29

பாரதா, எல்லாருடம்பிலுமுள்ள இந்த ஆத்மா கொல்ல முடியாதவன், ஆதலால் நீ எந்த உயிரின் பொருட்டும் வருந்துதல் வேண்டா! 30

ஸ்வதர்மத்தை கருதியும் நீ நடுங்குதல் இசையாது. அறப் போரைக் காட்டிலும் உயர்ந்ததொரு நன்மை மன்னர்க்கில்லை. 31

தானே வந்தெய்துவது, திறந்து கிடக்கும் பொன்னுலக வாயில் போன்றது. இத்தகைய போர்கிடைக்கப் பெறும் மன்னர் இன்பமுடையார்! 32

அன்றி, நீ இந்த தர்ம யுத்தத்தை நடத்தாமல் விடுவாயானால், அதனால், ஸ்வதர்மத்தையும், கீர்த்தியையும் கொன்று பாவத்தை யடைவாய் 33

உலகத்தார் உனக்கு மாறாத வசையுமுரைப்பார்கள். புகழ் கொண்டோன் பின்னரெய்தும் அபகீர்த்தி மரணத்திலும் கொடிதன்றோ? 34

நீ அச்சத்தால் போரை விட்டு விலகியதாக மகாரதர் கருதுவார்கள். அவர்களுடைய நன்மதிப்பை பெற்ற நீ இதனால் சிறுமையடைவாய். 35

உனக்கு வேண்டாதார் சொல்லத்தகாத வார்த்தைகள் பல சொல்லுவார்கள். உன் திறமையைப் பழிப்பார்கள். இதைக்காட்டிலும் அதிகமான துன்பமேது? 36

கொல்லப்படினோ, வானுல கெய்துவாய். வென்றால் பூமியாள்வாய். ஆதலால் போர் செயத் துணிந்து நீ எழுந்து நில். 37

இன்பம், துன்பம், இழவு, பேறு, வெற்றி, தோல்வி இவற்றை நிகரெனக் கொண்டு, நீ போர்கொருப்படுக. இவ்வணம் புரிந்தால் பாவமெய்தாய். 38

இங்ஙனம் உனக்கு சாங்கிய வழிப்படி புத்தி சொன்னேன். இனி யோக வழியால் சொல்லுகிறேன், கேள். இந்தப் புத்தி கொண்டவன் கர்மத் தளைகளை சிதறிவிடுவான். 39

இதில் முயற்சிக்கு அழிவில்லை. இது வரம்பு மீறிய செய்கையுமன்று. இந்த தர்மத்தில் சிறிதிருப்பினும், அ∴தொருவனைப் பேரச்சத்தினின்று காப்பாற்றும். 40

குருகுலத் தோன்றலே! உறுதியுடைய புத்தி இவ்வுலகத்தில் ஒருமையுடையது. உறுதியில்லாதோரின் மதிபல கிளைப்பட்டது, முடிவற்றது. 41

வேதங்களின் வெளியுரையில் மகிழ்வார் சிலர் பூக்களைப் போன்ற (அலங்காரச்) சொற்கள் பேசுகிறார்கள். தமது கொள்கை யொழிய மற்றது பிழையென்கிறார்கள். 42

**( தொடர்ந்து வரும், மெய்சிலிர்க்க வைக்கும்! )**





உள்ளூர் தலங்கள் ..



# தேவியர் சிறப்புகள்! ..

## நவராத்திரி பிரசாதம்!

# வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்!

**2002**ம் ஆண்டு ஆடி உற்சவத்தில் ஒரு அதிசயம் இங்கே நடந்தது ..

ஒன்பதாம் திருவிழாவுக்கு சப்பறம் இழுக்கவேண்டும். மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்திருந்தபடியால் பழைய மடல்சப்பறம் பழுதடைந்து விட்டது. எப்படியோ அடியார்கள் ஒன்று சேர்ந்து எல்லாப் பாகங்களையும் பொருத்தி ஒரு புதிய சப்பறத்தை செய்தார்கள். இழுப்பதற்கு வடம் வேண்டும். தற்காலிகமாக தேர் வடத்தை பயனபடுத்த எண்ணினார்கள். ஆனால் தேர் வடத்தை வெளியே எடுப்பதும் சாத்தியமற்றதாகிப் போனது.

மறுநாள் சப்பறத்திருவிழா. புதிதாக வடம் வாங்குவதானால் **100,000** ரூபா வேண்டும். செய்வதறியாத நிலையில் பக்கத்து ஊரில் வடம் கடனாக வாங்குவோம் என்ற நிலையில் பக்தர்கள் இரவைக் கழித்தார்கள். எல்லோருக்கும் மிகுந்த கவலை.

மறுநாள் விடிந்ததும் விடியாததுமாக இரண்டு மீனவ இளைஞர்கள் ஓடிவந்து குருக்களின் கதவை தட்டினார்கள். மீன் பிடித்துக்கொண்டிருந்த தமது வலையில் பாம்புபோல ஒரு பொருள் அகப்பட்டதாகவும், இழுத்துப் பார்த்ததில் தேர்வடம்போலிருப்பதாகவும் கூறினர்கள்.

உடனே, ஆலய நிர்வாகம் உழவு யந்திரங்களோடும். ஆட்களோடும் சென்று வெளியே எடுத்துப் பார்த்தபோது **750** மீட்டர் நீளமான தேர் வடம் ஒன்று கிடைத்தது. இந்த அதிசயத்தை மறுநாள் பத்திரிகைகள் படத்தோடு பிரசுரித்திருந்தன ..

ஆதி பராசக்தி தனது பல்வேறு தோற்றங்களில் உயிர்களை ரட்ஷித்து வருவதால் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு பெறுகின்றன.

காளி, துர்க்கை, ஈஸ்வரி, லட்சுமி என்ற திருக்கோலங்களால் அருள் பாலித்து வருகின்ற அன்னைக்கு முத்துமாரி அம்மன் என்ற மூர்த்தமும் உண்டு. நம் நாட்டில் முத்துமாரி அம்மன் கோயில் கொண்டிருக்கும் திருத்தலங்கள் ஒரு தொகை.

இந்த அம்மனின் பழமை வாய்ந்த கோயில்களில் வேலணை பெருங்குளத்து தலமும் ஒன்று.

கல்வி, செல்வம், பலம் போன்ற பல தேவைகளை அம்பாளிடமிருந்து நிறைவேற்றிக்கொண்ட மக்களுக்கு நோய், பஞ்சம், வரட்சி வராமல் பார்த்துக்கொள்வதுதான் முத்துமாரி அம்மனின் வேலை. அதிலும், ஒதுக்குப்புற பிரதேசங்களில் வாழ்ந்துவந்த கஷ்ட ஜீவிகளின் நலனில் கருத்தாய் இருந்து காப்பாற்றி வருவது இந்த அம்பாளின் வழக்கமாகும்.

வேலணை பெருங்குளத்தில் உள்ள இந்த கோயிலின் வரலாற்றை மிக அரிதான தகவல்கள் மூலமே அறிய முடிகிறது. சரியான தகவல்கள் அறியமுடியாதிருப்பினும், இக்கோயிலைப்பற்றிய சில கர்ண பரம்பரைக் கதைகளும் இருக்கின்றன.



புதிய ராஜகோபுரத்துடன் ஆலய முகப்பு

தமிழரசர்களின் காலத்தைக் கொண்ட இவ்வாலயம் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டு அம்மன் விக்கிரகமும் காணாமல் போயிருந்தது. பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பெருங்குடி வேளாளன் கட்டமாதன் என்பவர் இருந்தார். அவர் ஒருநாள் வேலணை பெருங்குளத்தின் வடகரையில் ஓரமாக உலவிவந்த நேரத்தில் கற்புலம் என்ற பகுதியில் ஒரு காட்சியை கண்டார். ஆவரசும், நொச்சியும் அடர்ந்து கிடந்த பற்றை ஒன்றினுள் ஒரு கற்சிலை கிடப்பது தெரிந்தது.

சாட்சாத் அது ஸ்ரீ முத்துமாரி அம்மனுடையது என்று அறிந்தார்.


எழில்மிகு ஆலயத்தோற்றம்..

### குடிசையில் அம்பாள்! ..

உடனே ஊர்மக்களை அழைத்துவந்து, எல்லோருமாக அதனை தூக்கிவந்து குடிசை ஒன்றை அமைத்து பிரதிஷ்டை செய்து வணங்கினர்.


தற்சமயம் உள்ள ஆலயத்தின் தெற்கே உள்ள நெடுங்கேணி என்ற இடத்திலேயே அந்த காணித்துண்டு இருக்கிறது. இப்போது புதிதாக ஆலயம் அமைக்கப்பட்ட நிலையில் அதில் வாசம்புரிந்து வருவதும் அன்று கண்டெடுக்கப்பட்ட அதே அம்மனாக இருக்கலாம்.

### கோயில் கிடைத்தது அம்பாளுக்கு ..

குடிசை வாசம் மேற்கொண்டு வந்த அம்மனுக்கு கல்லால் ஒரு ஆலயத்தை அமைத்துத்தர பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் திருவருள் கிட்டியது. அறுபது பரப்பு காணியை வாங்கி கல்லாலும், சுண்ணாம்பாலும் அழகியதொரு கோயிலை கட்டிமுடித்தனர் அடியவர்கள். அதன்பின் பெருமளவில் மக்கள் வந்து வழிபட்டுச் செல்ல சந்தரப்பம் கூடியது. அந்நேரத்தில் வாழ்ந்த புங்குடுதீவைச் சேர்ந்த காசித்தம்பி என்ற பெரியாரே அக்கோயிலைக் கட்டிக்கொடுத்த தர்மவான்.

காசித்தம்பி அவர்கள் அமைத்துத்தந்த கோயிலில் இருந்து அம்பாள் எண்பது ஆண்டுகள் அருளாட்சி நடத்தினாள். அதைத்தொடர்ந்து அன்னையின் உறைவிடம் மேலும் பொழிவு காண்பதற்கு வேளை வந்தது. **1885-1890** காலப்பகுதியில் யாதவராயர் இராமநாதன் என்பார் ஆகம விதிப்படி ஆலயத்தை அமைக்க முடிவு செய்தார். பழைய கோயிலை இடித்துவிட்டு தூபி, அர்த்தமண்டபம், சபாமண்டபம், மகாமண்டபம் முதலான சிறப்புகளோடு புதிய ஆலயத்தை அமைத்தார். ஆனால் கூரை மட்டும் ஓலையால் வேயப்பட்டிருந்தது. அக்குறையையும் தீர்த்து வைத்தார், அங்கே இருந்த கதிர்காமம் ஆறுமுகம் என்பார். கூரைக்கு ஓடு வேய்ந்து கொடுத்ததோடு, கொடித்தம்பம் ஒன்றையும் அமைத்துக்கொடுத்தார். அக்காலப்பகுதியில் விஸ்வகரும குலத்தார் முன்வந்து அம்பாளுக்கு வசந்த மண்டபம் அமைத்துத்தர, வயிர டு என்பார் யாக மண்டபம் அமைத்துக்கொடுத்தார்.

தொடர்ந்து சுற்றுமதிலும், கட்டுத்தேரும், உள்வீதியில் சுப்பிரமணியர், சனீஸ்வரர் கோயில்களும் உருவாக வள்ளல்குணம் படைத்த பல சமயசீலர்களும் உதவினர்.


**வாயிற் காவலரான துவாரபாலகர்**

காலத்தைவென்று இப்போது கம்பீரமாக நிலைகொண்டிருக்கும் ஆலயத்தின் சிறப்புகளுக்கு எல்லையே இல்லை. சகலவிதமான பரிவார மூர்த் மண்டபங்கள், சப்பரம், சித்திரத்தேர், தெப்பக்குள அன்னதான மடம், ஆலய நிர்வாகம் முதலிய வசதிகளோடு பெரும்புகழீட்டி வருகிறாள் ஸ்ரீ முத்துமாரியம்மன்.


எல்லாவற்றிற்கும் மகுடமிட்டதுபோல, ஏழு தள ராஜகோபுரம் அமைக்கப்பட்டு, **2010** ம் ஆண்டில் கும்பாபிஷேகமும் நடத்தி முடித்திருப்பது பெருஞ்சிறப்பு.

**ஓம் சக்தி! ..**

# நவராத்திரி பிரசாதம்!



## தேவியர் சிறப்புகள்! ..



**பொன்னமராவதி அன்னையை அறியுங்கள் இவள், பொன்னாடும் செல்வி ! ..**

அன்றொருநாள் ஆயர் குலத்தினரிடையே ஒரு குறத்தி வந்தாள். ''உங்களுக்கு நல்ல சகுனங்கள் சொல்லுவேன்.. குறி பார்த்து வழி சொல்லுவேன் .. பதிலுக்கு உண்பதற்கு உணவு தாருங்கள்! ..'' என்றாள். அவளின் அழகும், கள்ளமிலா பேச்சும் பால் மனம் படைத்த ஆயர்களை கவரவே, வேண்டிய அமுதம் படைத்தனர். நிறைவாக உணவுண்டவுடன் திருப்தி பொங்க அந்தக் குறத்தி கலகலவென சிரித்துவிட்டு சட்டென மறைந்துவிட்டாள்!

வியந்து நின்ற ஆயர்கள் அவள் மீண்டும் வரமாட்டாளா என ஏங்கினர். இனம்புரியாத பாசமும், மதிப்பும் அவள்மீது எல்லோருக்கும் வந்தது. நாட்களும் கடந்தன.

வெகுநாட்களின் பின்னர், ஒருநாள் திடீரென்று மீண்டும் தோன்றினாள். இன்ப அதிர்ச்சியால் ஆயர் மக்கள் குதூகலம் கொண்டு ஆடிக்கழித்தனர். அவளைக் காணாது அவர்கள் ஏங்கிய ஏக்கம் அவர்களுக்குத்தான் தெரியும். அப்படியொரு ஈர்ப்பு அவளிடத்தில் இருந்தது. ஆனால் வந்ததும் வராததுமாக '' நான் ஒரு அபலை, யாரும் எனக்கு கிடையாது ..என்னை சேர்த்துக்கொள்ளுங்கள் ..''
என்றாள். மக்களும் அவளுக்கு அறுசுவையோடு உணவளித்து ஆதரவு காட்டினார்கள்.

அவளின் தேவ ரகசியம் நெடுநாள் கழித்து ஆயர்குலத்தவருக்கு தெரிய வந்தபோது அசந்து விட்டார்கள்! ஆம், அந்த நங்கை யாரெனில், திருமாளின் தங்கையே அவள்! **பொன்னாடும் செல்வி!!**

ஏழு சகோதரிகளில் இளையவள். ஒருமுறை தேவலோகத்தில் கொடுத்த வாக்குறுதி ஒன்றை நிறைவேற்றத் தவறியதால் விரே பிறந்து மானிடர்களோடு உண்டு, 'தண்டனை'யும், விமோசனமும் விரும்பினாள் தேவி.

ஆதலால் **'மீண்டும் ஆற்று வழியாக நாளை உங்களிடம் வருவேன்..'** என வாக்களித்து மேலுலகம் சென்றாள் அன்னை.

ஆயர்குலத்தோர் 'மீண்டும் அந் நங்கையை பிரிந்தோமோ..' என ஏங்கினர்.

ஆனால் சொன்னவாறே மறுநாள் காவிரி ஆற்றின் நடுவே சுடரொளியாய் ஒளிர்ந்த பேழையில் தேவியானவள் தன் ஏனைய சகோதரிகளுடன் விக்கிரக சொரூபமாக வந்து சேர்ந்தாள்.

இறைவியானாள்.

நவராத்திரி நாயகிகளின் அம்சமாக இன்றும் உலகோர் துயர் களைகிறாள் ..



இந்துக்களின் வாழ்வில் ஒளியூட்டும் நெறிகள் ..

# தர்ம சாஸ்திரம்



## ..01

மனிதன் செய்யக்கூடிய காரியங்கள் தடங்கல் இல்லாமல் நடக்கவேண்டுமானால்., முதலில விநாயகப் பெருமானை வேண்டிய பின்பு பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற மும்மூர்த்திகளையும், தன் குலதெய்வத்தையும், தன் குலகுருவையும், நவக்கிரகங்களையும் தன் சக்திக்குத் தகுந்தபடி அர்ச்சனை, அபிஷேகம், நைவேத்தியம், பூஜை, பிரார்த்தனை முதலியன செய்யவேண்டியது இந்துக்களின் கடமையாகும்.

நமது குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கு முன்பும், நடந்த பின்பும் குல வழக்கப்படி குலதெய்வத்திற்கு பூஜை செய்யும் காரியங்களும், பிதுர்களுக்கு ப்ரீதி உண்டாகும் சிரார்த்தம், தர்ப்பணம் போன்றவைகளையும் செய்தால் குலதெய்வங்களின் பக்கபலமும், பிதுர்களின் ஆசீர்வாதமும் கிடைத்து குடும்பம் குதூகலிக்கும். அதே சமயம் இஷ்ட தெய்வத்தையும் மறந்து விடக்கூடாது.

சிருஷ்டி கர்த்தாவான பிரம்மதேவன் மனிதர்களின் நெற்றியில் அழுத்தமாக எழுதியுள்ள அட்ஷர வரிசைக்கு 'ஜாதகம்' என்று பெயர். அப்படிப்பட்ட புனிதமான ஜாதகத்தை எழுதிய பிரம்மதேவனின் ஜாதகத்தையே கணித்து பலன் கூறக்கூடிய ஆற்றல் சோதிடத்துக்கு உண்டு. ஈரேழு பதினான்கு லோகங்களையும், அங்கே நடைபெறும் சுபாங்கப் பலன்களையும் பன்னிரண்டு ராசிகளில் அடக்கி கணித்துக் கூறும் வல்லமை படைத்தவர்களை 'சோதிடர்' என்றும், 'தைவக்ஞர்' என்றும் அழைக்கிறார்கள். இப்படிப்பட்ட சோதிடர்களின் சாமர்த்தியம் பெருமைக்குறியது மட்டுமல்ல, பாதுகாப்பானதும்கூட.

சோதிடம் கூறும் சோதிடரும், நீதி வழங்கும் நீதிபதியும், காரணமின்றி பரகாரம் பண்ணுகிறவரும், தேவாலயத்தில் பூஜை செய்யும் அர்ச்சகரும் சாஸ்திர ரீதியாகச் செய்யாவிட்டால் பிரம்மஹத்தி தோஷம் வரும். இப்படி மகான்கள் கூறியிருப்பதால் பயபக்தியோடுதான் அவர்கள் முடிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

குழந்தையானது பூமியில் ஜனனமானவுடன் நெய், தேன் இவற்றில் சொர்ணத்தை தேய்த்து அக்குழந்தையின் நாவில் குலதெய்வத்தை வேண்டிக்கொண்டு மூன்றுமுறை தடவ வேண்டும். அதன்பின்பே தொப்புள் கொடியை அறுக்கவேண்டும்.

குழந்தை பிறந்த ஐந்தாவது நாள் பாவக்கிரக தோஷ நிவர்த்தியாக பஞ்சாயுத ரட்ஷை செய்து அரை ஞானில் கட்டவேண்டும். இதனால் பாலாரிஷ்ட தோஷம் விலகுகிறது.

குழந்தை பிறந்த 11வது நாளில் நல்ல லக்கினத்தில் பெரியோர்கள் முன்னிலையில் வைத்து நற்பெயர் இடவேண்டும். நாகரீகப் பெயர்கள் இடுவதை விட தெய்வங்களின் பெயர்களை வைப்பதே சிறந்தது.

குழந்தை பிறந்த 31வது நாள் சுப லக்கினத்தில் பாலாடையினால் அக் குழந்தையின் தாயாரைக்கொண்டு குழந்தையின் வாயில் பாலூற்றச் செய்யவேண்டும். தாயார் கிழக்கு முகமாக அமர்ந்து குழந்தையின் தலை தனது வலது துடையில் இருக்கும்படி படுக்க வைத்து வலது கையால் பாலூட்ட வேண்டும்.

குழந்தை பிறந்த 4வது மாதத்தில் ஒரு நல்ல தினத்தில் அக்குழந்தைக்கு சூரிய தரிசனம், சந்திர தரிசனம், பட்ஷி தரிசனம், தேவாலய தரிசனம் செய்விக்க வேண்டும். செவ்வாய், சனி தவிர மீதி உள்ள கிழமைகளில் பௌர்ணமி வரும் சமயம் இவைகளைச் செய்வது இன்னும் நல்லது.


குழந்தை பிறந்த 6வது மாதத்தில் சுக்ல பட்ஷத்தில் 10 நிமிடம் சுத்தியுள்ள லக்னத்தில் ஒரு நல்ல முகூர்த்த தினம் பார்த்து பெற்றோர்கள் அக்குழந்தையை மடியில் உட்கார வைத்து பால், தயிர், நெய், தேன், அன்னம் ஆகிய இந்த ஐந்தையும் சேர்த்து வாயில் ஊட்ட வேண்டும். இதற்கு அன்னப் பிரசானம் என்று பெயர். இதை குலதெய்வ, இஷ்டதெய்வ கோயிலில்கூட செய்யலாம்.

குழந்தை பிறந்த 6வது மாதத்திலோ, அல்லது 8வது மாதத்திலோ ஒரு நல்ல தினத்தில் அஷ்டம் சுத்தியுள்ள லக்னத்தில் பொன் ஊசியினால் காத குத்த வேண்டும். ஆண் குழந்தைக்கு முதலில் வலது காதும், பெண்குழந்தைக்கு முதலில் இடது காதும் குத்த வேண்டும். சிலர் பிறந்தநாள் அன்று காது குத்துகிறார்கள். அதைவிட 6வது, 8வது மாதத்தில் (கர்ணபூஷணம்) காது குத்தினால் வைரம் அணியும் யோகம் வரும்.

***( இன்னும் இருக்கிறது ..)***

**நன்றி : 'தர்ம சாஸ்திரம்'**

# வீடு கட்டலாம் என்றால் .



**யானை அசைந்து தின்னும், வீடு அசையாமல் தின்னும்'** என்று ஒரு பழமொழி உண்டு.

வீடுகட்டும் வேலை என்பது அந்த அளவுக்கு செலவையும், சிரமத்தையும் தந்து ஆளை காலிபண்ணிவிடுகிறது.

அதிலும் சரியாக திட்டமிடாமல் வீடு கட்டப் புறப்பட்டால் அவ்வளவுதான் ..

வீடுகட்டும் விஷயத்தில் இறங்கி, ஒருமுறை தேவேந்திரனும் பட்ட அனுபவத்தை இங்கே காணலாம் ..

**தே**வர் தலைவன் இந்திரன் ஒரு பெரிய மாளிகை கட்டவேண்டும் என்று ஆசைப்பட்டான். வைகுண்டம், சத்தியலோகம், தேவலோகம் எல்லாவற்றையும்விட பெரிதான இடமாக தனது புதியமாளிகை இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்தான்.

உடனே தேவசிற்பியான விஸ்வகர்மாவை வரவழைத்து தனது திட்டத்தை கூறினான். முவுலகும் காணாத அளவில் பெரிய மாளிகையை கட்டித்தரும் பொறுப்பை ஒப்படைத்தான்.

விஸ்வகர்மாவும் மாளிகையின் பிரம்மாண்டத்தை கருத்தில்கொண்டு தனது பெரும் பணியாளர் அணிகளை கொண்டுவந்து கட்டட வேலையை ஆரம்பித்தார். சுறுசுறுப்பாக வேலைகள் ஆரம்பமாயின. லட்சக்கணக்கான வேலையாட்களும், ஆயிரக்கணக்கான யாணைகளும் கடுமையாக உழைத்த ஆரவாரத்தில் விண்ணுலகமே இரண்டு பட்டது.

காலம் சென்றுகொண்டே இருந்தது. கேட்ட பொருளையெல்லாம் இந்திரனும் தருவித்துக் கொடுத்துக்கொண்டே இருந்தான். ஆனால் வேலையோ முடிந்தபாடில்லை. உலகிலேயே பெருமளவு விஸ்தீரணம் கொண்டதாக மாளிகை அமையவேண்டுமென்பதாலேயே இந்த தாமதம் என்ற உண்மை இப்போதுதான் இந்திரனுக்குப் புரிந்தது.

அதுமட்டுமல்ல, தொடர்ந்து கடும் வேலையில் ஈடுபட்டிருந்ததால் வேலையாட்கள் எல்லோருமே சோர்ந்துவிட்டனர். மாளிகையோ கால்வாசியும் முடியவில்லை.

பாதியில் வேலை நின்றுவிட்ட நிலையில் இந்திரன் கவலையடைந்தான். அந்நேரத்தில் நாரதர் அங்கே வந்தார். அவரிடம் புதிய வீட்டை கட்டிமுடிக்கும் மார்க்கத்தை இந்திரன் கேட்டபோது,

''அப்பனே, வீடு கட்டும் விஷயத்தில் எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்கு சொந்தமாக வீடும் இல்லை. போகிற வருகிற வழியில் யார்வீட்டிலாவது தங்கி நாட்களை கடத்துகிறேன் ..'' என்றார்.

இந்திரன் யோசித்தான். 'வீடு கட்டுவதில்கூட அக்கறையற்றவர்களாக இருக்கிறார்களே ..'

சற்று நேரத்தில் அவ்வழியால் ரோமசர் என்ற மகரிஷி வந்தார். அவரின் தலையில் சிறிய பாய் ஒன்றை சுருட்டி வைத்திருந்தார்.

இந்திரன் கேட்டான். ''முனிவரே, தலையில் பாயோடு செல்கிறீர்களே! வீட்டில் இடமில்லையா? ..''

''நல்ல கேள்வி கேட்டாயப்பா, எனது வீடே இந்த பாய்தானே .., மழை பெய்தாலோ, வெயில் அடித்தாலோ என் உடம்பு ஒதுங்கிக்கொள்ள இவ்வளவு பெரிய மாளிகை போதாதா? ..'' என்று முனிவர் கேட்டதும் அதிர்ந்துவிட்டான் தேவேந்திரன். தனது அறியாமையை நினைத்து வெட்கப்பட்டு மாளிகை கட்டும் வேலையை உடனே நிறுத்தினான்.



## அனுமனுக்கு உதவிய மாலினி ..

# யார் இந்த மாலினி?

ராம லட்சுமணர்களைக் காப்பாற்ற அனுமன் சஞ்சீவி மலையைப் பெயர்த்துக்கொண்டு வந்த கதை குழந்தைகளுக்குக்கூட தெரிந்திருக்கிறது.

ஆனால், அந்த விஷயத்தில்கூட அவர் ஏகப்பட்ட பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியிருந்த கதை பலருக்கு தெரிந்திருக்காது.

ஜம்பவான் கூறிய யோசனைப்படி சஞ்சீவி மூலிகையை கொண்டுவர ஆகாயத்தில் எழும்பிப் பறந்த அனுமனை வழியிலேயே ஒழித்துக்கட்ட முன்கூட்டியே இராவணன் திட்டமிட்டுவிட்டான். அதன்படி அவனது நண்பனான காலநேமி என்னும் மாயாவி அனுமன் பறந்து வந்துகொண்டிருந்த வழியில் ஒரு முனிவன் வேடத்தில் " ராம் ..ராம் .." என்று பொய்யாக பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். அவனை ராமபத்தனாக எண்ணிய மாருதி அருகில்சென்று வணங்கி, வந்த காரியத்தை கூறியபோது,

"அடடா. என்ன கொடுமை! என் ராமபிரானுக்கா ஆபத்து? பயப்படாதே, நான் ஒரு உபாயம் சொல்கிறேன். அதன்படி செய்தாயானால் விரைவாக அம் முலிகையினைப் பெற்றுச் சென்று விடுவாய்.. " என்று பொய்கூறி நடித்தான்.

இதனால் மகிழ்ந்த வாயுபுத்திரன் ஆவலோடு அது என்னவெனக் கேட்டபோது, " இங்கே ஒரு மாயப் பொய்கை உண்டு. அதில் நீ மூழ்கி எழுந்தால், ஒரு கந்தர்வனின் தோற்றம் பெறுவாய். அப்போது இலகுவாக சஞ்சீவி பர்வதத்தை அடைந்து மூலிகையை பெறுவாய் " என்று கூறினான். அனுமனும் நன்றி கூறிவிட்டு அந்த பொய்கைக்குள் இறங்கினார்.


அந்த பொய்கையில் ஒரு பயங்கர முதலை இருந்தது. ஒரு முனிவரின் சாபத்தினால் அப்படி வாழ்ந்தாள் மாலினி என்ற அப்சர மங்கை.

நீரில் யார் கால்வைத்தாலும் விழுங்கிவிடுவாள். அவளுக்கு அனுமனை இரையாக்குவதே காலநேமியின் திட்டம்.

தண்ணீருக்குள் முதலை தாக்கியபோது, தான் ஏமாந்ததை அறிந்தார் ஆஞ்சநேயர். அப்புறமென்ன! மயிரிழையில் தப்பி தனது உருவத்தை பெரிதாக்கி தடாகத்தை ஒரே அடியில் முதலையோடு தரைமட்டமாக்கினார்.

இதனால் சாபவிமோசனமடைந்த மாலினி அனுமனை பணிந்து வணங்கி,காலநேமியின் சதியை எடுத்துரைத்தாள். அவனையும் கொன்றுவிட்டு சஞ்சீவி பர்வதத்திற்குச் சென்ற அனுமனுக்கு வழிகாட்டி, உதவிபுரிந்து அனுப்பிவைத்தாள் இந்த மாலினி.


வீட்டில்
இருந்தபடியே
'பக்தி விஜயம்..'
இதழைப்பெற,
சந்தாதாரர்
ஆகுங்கள்!
தொடர்பு:
0713861168
0774335144
0232250071

வாசிப்பு இன்பத்தில் திளைப்பீர்,
ஆன்ம பலத்தில் வாழ்வீர்! ..


உ
ஓம் ஸ்ரீராம ஜெயம்
ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் கோவில்
வட்டக்கச்சி - கிளிநொச்சி